


1-11-1988 ரூ. 1
தமிழரசு
அன்னை இந்திராகாந்தி
தோற்றம் :
மறைவு :



பசும்பொன்
முத்துராமலிங்கத் தேவர்

தோற்றம் : 30-10-1908

மறைவு : 30-10-1963



கூட்டுறவில் உறுப்பினர்கள் நேர்மையாக இருக்க வேண்டும். கூட்டுறவின் சிறப்பை நன்கு அறிந்திருக்க வேண்டும். முன்னேற்றம் காணக், குறிப்பிட்ட இலக்கு இருக்க வேண்டும். கூட்டுறவு முயற்சியின் வெற்றிக்கு இதுதான் ரகசியம்.

உறுப்பினர்களின் நாணயத்தைப் பொறுத்துத்தான் கூட்டுறவின் வெற்றி அமைகிறது. இவ்வியக்கம் சங்கங் களின் எண்ணிக்கையைப் பொருத்ததல்ல; உறுப்பினர்களின் நேர்மையின் அடிப்படையில் அமைகிறது.

—காந்தியடிகள்

கூட்டுறவோடு, கூட்டுறவியக்கத்தோடு, இந்தியாவைப் பிணைக்க வேண்டும் என்பதே என்னுடைய நோக்கம். அதுவே ஊர்தோறும் அடிப்படைச் செயலாக அமைய வேண்டும். இந்தியாவின் பொது எண்ணமே கூட்டுறவு அணுகுமுறையில் இருக்கவேண்டும்.

நமது உழவர்களை விஞ்ஞான முறையில் வேளாண்மைத் தொழில் செய்ய ஈடுபடுத்த வேண்டும். அதை நாம் எவ்வாறு செய்வது? கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக இதை மிக எளிதாகச் செய்ய முடியும். வேறு அணுகு முறை எதுவும் எனக்குத் தோன்றவில்லை.

—ஜவகர்லால் நேரு



**அன்னை இந்திராகாந்தி மறைந்த அக்டோபர் 31-ஆம் நாள் தேசிய மறு சமர்ப்பண நாள்.**

# அன்னை இந்திராவின் அமுத மொழிகள்



இந்தியச் சகோதரர்களே! சகோதரிகளே! மகான்கள், தீரர் களின் இரத்தம் உங்கள் நாளங் களில் ஓடுகின்றது. மனத் தளர்வை விட்டு,எதிர்காலத்தில்திடநம்பிக்கை கொள்ளுங்கள். போரோ, பஞ்சமோ எந்தச் சங்கடம் வந்தாலும் உறுதி யுடன் ஈடுகொடுத்துச் சமாளிப் போம். தேசத்தைக் கைவிட மாட்டோம். தேச பக்தியைச் சொல்லிலும் செயலிலும் பிரதிபலித் தால் நம்மால் ஆகாதது ஏதுமில்லை.

எல்லாத் துறைகளிலும் நாட்டை முன்னேற்றப் பாதையில் வேகமாகச் செலுத்துவதுதான் தலைசிறந்த பாதுகாப்பு. ஒற்றுமை, கட்டுப்பாடு, ஆக்கச் செயல்களையும், நாட்டு நலனுக்கு உகந்தவை எவை, அவற்றை எப்படிப் போற்றிப் பாது காப்பது என்றெல்லாம் ஆய்ந் தோய்ந்து முடிவெடுத்துச் செயல் படல் வேண்டும்.

நாட்டில் ஒவ்வொரு பகுதியிலும் வாழும் ஆயிரமாயிரம் பாமர மக்களே இந்தியாவின் உண்மைச் சக்தியாக விளங்குகின்றனர். நாம் எவ்வளவுதான் ஆர்வம் காட்டினா லும், எத்தனையோ காலமாக முற்றி முதிர்ந்துள்ள பிரச்சனைகளுக்குத் திடுதிப்பென்று தீர்வு காண முடியாது. கடினமாக உழைத்துக் கூடிப் பேசி ஆலோசித்து, பாமர மக்களும் எல்லா வகுப்பினரும் மனம் உவக்கச் செயல்பட்டால்தான் எதிர்காலம் சிறக்க அடிகோல முடியும்.

மதச்சார்பின்மை, சோஷலிசம், ஜனநாயகம் இவை மூன்றும் இணைந்து செயல்பட்டால்தான் நாடு முன்னேறும். நம் பண்டைய பண்பாடுகள், விடுதலைப் போர், இவற்றின் அடிப்படைகள் - இவை யெல்லாம் நம்முடைய எளிய மனத்தை உருக்கு ஆக்கி உள்ளன.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019
விபவ - ஐப்பசி 16

மலர்: 19 இதழ் : 9

1-11-1988








# தமிழ்நாட்டில் பிரதமர்

சேலம் மாவட்டம் திருச்செங்கோட்டில் கடந்த 25.10.88 அன்று மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் டாக்டர் சுப்பராயன், பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரது சிலைகளைத் திறந்து வைத்தார்.




திருச்செங்கோட்டில் பொதுமக்கள் குறைகளை மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் நேரில் கேட்டறிந்தார் (25.10.88).







# படமும் செய்தியும்



சென்னைக்கு வந்திருந்த அனைத்து நாட்டு நிதி அமைப்பின் நிருவாக இயக்குநர் திரு காம்டேசஸ் அவர்களுக்கு ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி. வி. இராமகிருஷ்ணா விருந்து அளித்து நினைவுப் பரிசு வழங்கினார்.



நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா தமிழ்நாடு அரசின் சார்பில் கடந்த 19.10.88 அன்று சென்னையில் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் மத்திய இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம், ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன், தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. ஆகியோர் பங்கேற்றனர்.

குறைந்த செலவில் துப்புரவுப் பணிகளைப் பெருக்குவது பற்றிய கருத்தரங்கை, சென்னையில் ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன் அவர்கள் 25.10.88 அன்று தொடங்கிவைத்தார்.

'தமிழ்நாடு முழுவதும் 16 ஆயிரம் நகர சுத்தி தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களின் மறுவாழ்வுக்காக ரூ. 83 கோடி செலவில் புதிய திட்டம் தீட்டப்பட்டுள்ளது' என்று இக்கருத்தரங்கில் ஆலோசகர் திரு ஆ. பத்மநாபன் குறிப்பிட்டார்.



# தீரமிக்க தேசபக்தர் முத்துராமலிங்கத் தேவர்



இந்திய விடுதலைக்காக எழுச்சித் தீ மூண்ட காலத்தில், தமிழ்நாட்டிலும் அக்கனல் மூட்டிக் களம்கண்டவர்கள் பலராவர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் வரிசையில் வைத்தெண்ணப்பட வேண்டியவர் முத்துராமலிங்கத் தேவர்.

'தமிழ்நாட்டில் 'தேவர்' என்றாலே அச்சொல் இவரைத்தான் குறிக்கும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 'பசும்பொன்' என்ற சிற்றூரில் 30-10-1908 ஆம் ஆண்டில் பிறந்தவர் தேவர். உக்கிர பாண்டியத் தேவர்-இந்திராணி அம்மையார் ஆகியோர் இவரது பெற்றோர்.

இளமைக் காலத்திலேயே தாயை இழந்துவிட்ட தேவர், தமது பாட்டியார் இராணி அம்மையாரின் அரவணைப்பிலேயே வளர்ந்தார். இவரது பள்ளிக்கூட நாட்கள் கமுதியிலும், பின்னர் பசுமலை உயர்நிலைப் பள்ளியிலும், மதுரை ஐக்கியக்கிறித்துவஉயர்நிலைப்பள்ளியிலும் கழிந்தன. கடைசியாக — இராமநாதபுரம்அரசர்உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் படித்தார். அந்நேரத்தில் ஊரெங்கும் 'பிளேக் நோய்' பரவவே செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவரான இவர் படிப்புக்குப் புள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

பள்ளிக்கூடத்தை விட்டு நிறுத்தப்பட்டாலும்கூட, தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள அறிஞர் பெருமக்களின் அரிய நூல்களை மிகுந்த ஆர்வத்தோடு படித்து வந்தார். வன்மக் கலையின நுட்பங்களை மட்டுமல்ல, ஜோதிடம், வான சாஸ்திரம், வைத்தியம் ஆகியவைகளையும் கற்றறிந்தார் தேவர். வீர வாலிபனாக விளங்கிய இவர் சிலம்பம், குதிரையேற்றம், துப்பாக்கிச் சுடுதல் ஆகியவற்றிலும் சிறந்த பயிற்சி பெற்றார்.

ஆன்மநேயமும், தேசபக்தியும், தமதிரு கண்களாக இவரால் கருதப்பட்டன. கற்றறிவாளர்களின் சொற்பொழிவுகளுக்கெல்லாம் தவறாமல் செல்லுவதும், மிகக் கூர்மையாகக் கேட்பதும் இவரது வழக்கம். அதன் மூலம் தமது சொல்லாற்றலையும் பெருக்கிக் கொண்டார் தேவர். தமிழில் மட்டுமல்ல; ஆங்கிலத்திலும் மேடையேறிப் பேசும் அளவுக்கு ஆற்றல் பெற்றவரானார்.

23-6-33-ல், காயல்குடியில் நடைபெற்ற விவேகானந்தர் விழா மேடையில்தான் முதன் முதலாக இவரது சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. கேட்போரைத் தம் வயப்படுத்தக்கூடியதாக இருந்த அந்த மேடைப் பேச்சை அனைவரும் போற்றிப் புகழ்ந்தார்கள். மற்ற மாநில மக்களை மட்டுமல்ல ஜப்பான், பர்மா போன்ற பிற நாட்டு மக்களையும் கவர்வதாக இருந்தது தேவரின் சொல்லாற்றல்.

ஒரு சமயம் காசிப் பல்கலைக் கழகத்தில் சமயச் சொற்பொழிவாற்ற, அழைத்திருந்தார்கள். ஆங்கிலப் புலமை பெற்ற சட்ட மேதையான சர் சி. பி. இராமசாமி ஐயரே விழாவின் தலைவர். அந்தக் கூட்டத்தில் மூன்று மணி நேரம் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார் தேவர். அதைக் கேட்டு அனைவரும் மெய்மறந்து விட்டார்கள்.

அதையடுத்துப் பேசிய சர் சி.பி. இராமசாமி ஐயர் - 'என்னதான் நம்மை ஆங்கிலேயர்கள் ஆண்டாலும், இந்த மூன்றுமணி நேரமும் ஆங்கிலத்தை நம் தேவர் அவர்கள் ஆண்டுவிட்டார்' என்று பெருமையோடு சொல்லிப் பாராட்டினார்.

ஒரு சமயம் 'தமிழ்த்தென்றல்' திரு. வி. க. அவர்களே முத்துராமலிங்கத் தேவரைத் 'தேசியம் காத்த செம்மல்' என்று சிறப்பித்துச் சொல்லியிருக்கிறார்.

'சேது நாட்டுச் சிங்கமான தேவரின் கர்ஜனை கேட்காத விடுதலைப் போராட்ட கால மேடைகளே இல்லை என்று கூறலாம். அவரது எழுச்சி முழக்கம் அந்நாளில்துவண்டு கிடந்த மக்களையும் வெகுண்டு எழச் செய்வதாக இருந்தது. அதன் விளைவு என்ன தெரியுமா?

பாலகங்காதர திலகருக்கு விதித்தது போலவே, அன்றிருந்தே ஆங்கில அரசு, தேவருக்கும் வாய்ப்பூட்டுச் சட்டம் விதித்தது.

1937-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது, காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் தமிழகத்தில் பெரு வெற்றி பெற தேவரின் வீரம்மிக்க மேடைப் பேச்சே மிகவும் துணை புரிந்தது. அதனாலேயே தீரர் சத்தியமூர்த்தி அவர்கள், இவரை 'காங்கிரசைக் காத்தான்' என்று சொல்லிப் புகழ்ந்தார்.

'வேதாந்த பாஸ்கரா' 'சன்மார்க்க சண்டமாருதம்' 'பிரவசன கேசரி' 'இந்துசமயப் புத்தமேதை' என்ற சிறப்புப் பெயர்களும் தேவருக்கு உண்டு.

சுதந்திரப் போராட்ட காலத்தில் தீவிரவாதத் தலைவராக இருந்த சுபாஷ் சந்திரபோஸின் நெருங்கிய நண்பராக இருந்த தேவர், அவரது முன்னேற்றக் கட்சி தமிழ்நாட்டில் காலூன்றவும் வகை செய்தார். அதனால் இவரைத் 'தென்னாட்டு போஸ்' என்று குறிப்பிட்டவர்களும் உண்டு.


இவர், நாடாளுமன்றம், சட்டமன்றம் ஆகிய இருதொகுதிகளுக்கும் இரண்டு தடவை போட்டியிட்டு வெற்றி கண்ட பெருமையுடையவர்.

ஏறத்தாழ 20,100 நாட்கள் இவ்வுலகில் வாழ்ந்த தேவர் திருமகன், தம் வாழ்நாளில் சிறையில் மட்டும் 4,000 நாட்களைக் கழித்திருக்கிறார்.

ஆங்கிலேய ஆட்சியாளர்கள் - தேவருக்குத் துணை நின்ற தென்புல மக்களை ஒடுக்குவதற்காகவே 'குற்றப் பரம்பரைச் சட்டம்' கொண்டு வந்தார்கள். அதை எதிர்த்துப் போராடி திரும்பப் பெறச் செய்த - வீரவாழ்வு வாழ்ந்த தேவர் சிறந்த முருக பக்தவராவார்.

ஒய்வற்ற உழைப்புக்குச் சொந்தக்காரராக வாழ்ந்த முத்துராமலிங்கத்தேவர், தம் 55 -ஆம் வயதில் 1963-ஆம் ஆண்டில் தம் பிறந்த நாளான அக்டோபர் 30 ஆம் நாளன்று மறைந்தார்.

—பி. எல். ராஜேந்திரன்



# கூட்டுறவு ஒரு தத்துவம்

**ஏ. ஜே. சீனிவாஸ்**

**கூடுதல் பதிவாளர் - தனி அலுவலர்,**

**தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்.**

ஒருமித்த உணர்வு என்ற அடிப்படையில் எல்லா உயிரினங்களிடையேயும் இருந்து, பின்னர் வெற்றிகரமான செயல்பாடுகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு, தற்போது ஒரு பேரியக்கமாக உலக நாடுகளில் பின்பற்றப்படுவதுதான் கூட்டுறவு.

கூட்டுறவு என்பது சமூகத்தின் நலிவுற்றவர்களுக்கும்பின்னடைந்தவர்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதால் ஒரு சமூக இயல் தத்துவம் ஆகிறது. கூட்டுறவு என்பது பண்டகசாலை, விற்பனை விநியோகம் ஆகிய துறைகளில் ஈடுபடுவதால் ஒரு பொருளாதாரத் தத்துவம் எனலாம். ஏற்கெனவே மனிதனால் மேற்கொள்ளப்பட்ட முதலாளித்துவம், பொது உடமைச் சமதர்மம் போன்ற தத்துவங்களில் நல்ல அம்சங்களை மட்டும் எடுத்துக் கொள்வதால் கூட்டுறவென்பது தத்துவங்களிலிருந்து பிறந்த தத்துவமாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தனி உடைமைக்கும் பொது உடைமைக்கும் இடையே அமைக்கப்பட்ட பாலம்தான் கூட்டுறவு— என்று குறிப்பிட்டார்.

தத்துவம் என்றால் ஏதோ ஞானிகளால் முதலில் உபதேசிக்கப்பட்டு, அதனைப் பின்னர் கடைபிடிப்பது என்கிற அடிப்படையில் இந்தத் தத்துவம் இல்லை. இது வாழக்கையின் நடைமுறைகளில் இருந்து உருவானதாகும். உதாரணத்துக்கு சொன்னால் கூட்டுறவுத் தத்துவம் என்பது இலக்கணம் மாதிரி, வாழ்ககை நடைமுறை என்பது இலக்கியம் போன்றது. இலக்கியம் உருவாகி அதற்காகத்தான் இலக்கணம் அமைந்தது. அதுபோல வாழ்க்கை முறைகளுக்காகத்தான் கூட்டுறவுத் தத்துவம் என்பது உருவானது.

'கூட்டுறவு' என்னும் சொல் சேர்ந்து வாழ்வது, சிந்திப்பது, செயலாற்றுவது எனப்பொதுவாகப் பொருள்படும். ஊர்வன, பறப்பன மற்றும் வன விலங்குகளிடையேயும் உணர்ச்சி பூர்வமான கூட்டுறவு உண்டு. வாழ்க்கைப் போராட்டத்தில் மனித மேம்பாட்டுக்கு மனித வளர்ச்சிக்குக் கூட்டுறவு உணர்வு தான் அடிப்படை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். எனவே கூட்டுறவு என்ற கருத்து, கூட்டுறவு இயக்கத்தைக் காட்டிலும் தொன்மையானதாகும். பின்னர் சமூகப் பொருளாதாரப் பின்னணியில் வளர்ச்சியடைந்ததால் ஒரு பேரியக்கமாக உருவெடுத்தது.

கூட்டுறவுத் தத்துவம் ஏட்டுச் சுரைக்காயாக இல்லாமல் வாழ்க்கை அனுபவங்களிலிருந்தே உருவானதால் அதன் வரையறையும், திட்டவட்டமானதாக நிலையானதாக இல்லாமல், காலத்துக்கு ஏற்பவும், கூட்டுறவாளர் பெற்ற அனுபவங்களுக்கு ஏற்பவும் விளக்கங்கள் மாறுபட்டுள்ளன.

''கூட்டுறவு என்பது கூட்டு வணிகத்திற்கென ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு. இவ்வமைப்பு மெலியோர் இடையே தோன்றியது. தன்னலமற்ற நோக்கோடு செயல்படுவது சங்க அங்கத்தினர்கள் தாம் எந்த அளவிற்குச் சங்கத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்களோ அந்த அளவிற்கு இலாபம் நுகரத் தகுதி பெற்றோரார்வர்'' என்பது சி. ஆஃபே என்னும் அறிஞர் தரும் விளக்கமாகும்.

எச்.கால்வர்ட் என்பவர் ''கூட்டுறவு என்ற அமைப்பில் மக்கள் தாமாகவே தம்மை மனிதர்கள் என்ற முறையில் ஈடுபடுத்திக்கொள்வர். சம அடிப்படையில் தம்முடைய பொருளாதார மேம்பாட்டிற்கெனக் கூடுவர்'' என்கிறார்.

கூட்டுறவு இதயத்தையும்மனதையும் தொடும் சக்தி என்றும் வணிகத்தில் ஈடுபட்டுள்ள ஒரு மதம் என்றும், தன்னிறைவும், சேவையும் வெளிப்படும் போதனை என்றும் சர் மால்கம் டார்லிங் வருணிக்கிறார்.

பொதுவான பொருளாதாரத் தேவைகளுக்கென அத்தகைய தேவையுடையவர்கள் தாமாகவே தம்முள் ஏற்படுத்திக் கொள்ளும் விரிவான இயக்கத்தின் ஒருபகுதியே கூட்டுறவாகுமென்பது வி. எல். மேத்தாவின் வரையரையாகும்.

ஒரு கூட்டுறவுச் சங்கம் உபயோகிப்போர் அளவில் அமைக்கப்பட்டு நடத்தப்படுகிறது. ஜனநாயக விதிகளைப் பயன்படுத்தித் தங்கள் சொந்த அங்கத்தினர்களுக்கும், சமுதாயம் முழுமைக்கும் சேவை செய்கிறதென்பது பேராசிரியர் லாம்பர்ட்டின் பார்வையாகும்.

ஒற்றுமை, பொருளாதாரம், ஜனநாயகம், நியாயம் சுதந்திரம் முதலிய அடிப்படையில் அமைக்கப் பெற்ற ஒரு சமூக அமைப்பு முறையாகக் காண்கிறார் திரு வாட்கின்ஸ் என்னும் அறிஞர்.

''கூட்டுறவுக் கொள்கையென்பது சாதாரணமாகத் திறமையுடனும், சிக்கனத்துடனும் செயல்படுவது என்பதைவிடவும் மேலானது. அது சிக்கனமானது. அது நியாயமானது அது சமன் செய்கிறது. ஏற்றத் தாழ்வுகள் வளராமல் தடுக்கிறது. ஆனால் அவற்றையும்விட அது ஆழமானது. உண்மையில் கூட்டுறவு ஒரு வாழ்க்கை நெறி'' என்று முதல் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் குறிப்பிட்டார்.

கூட்டுறவு பற்றிய தத்துவ விளக்கங்கள் இவ்வாறு பலவகைப்பட்டிருந்தாலும் கூட்டுறவுச் செயலுக்கு ஆதாரமான சில கொள்கைகள்பின்பற்றப்படுகின்றன. உலகின் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு அக்கொள்கைகள் வழிகாட்டும் ஒளி விளக்குகளாக விளங்குகின்றன. இக்கொள்கைகளும் காலப் போக்கில் மாறிக்கொண்டும் வளர்ச்சியடைந்தும் வருகின்றன. இங்கிலாந்து நாட்டில் ராக்டேல் முன்னோடிகள் நேர்மை, உழைப்பு, விவேகம் தார்மீகம் இவற்றை வலியுறுத்தினார். பின்னர் நடுநிலைமை; கூட்டுறவு அமைப்புகளிடையே கூட்டுறவு ஆசிய கொள்கைகள் பின்னர் புகுத்தப்பட்டன. அனைத்துலகக் கூட்டுறவு மன்றமும், கார்வே குழுவும் கூட்டுறவுக் கொள்கைகளைச் செழுமைப்படுத்தி வளர்த்தன. தற்போது கூட்டுறவின் கொள்கைகளாக:—

1. அனைவரும் உறுப்பினராகலாம்.

2. மக்களாட்சி நிர்வாகம்.

3. முதலீட்டுக்கு அளவான வட்டி.

4. உபரித்தொகையில் நியாயமான பங்கு.

5. கூட்டுறவுக் கல்வி மற்றும்,

6. கூட்டுறவு நிறுவனங்களிடையே கூட்டுறவு ஆகிய ஆறு கொள்கைகளையும் கூறலாம்.

ஒரு கூட்டுறவு அமைப்பில் சேரவும, தொடர்ந்து நிற்கவும், விலக



வும் ஒருவருக்கு முழு சுதந்திரம் உண்டு. ஜாதி, சமயம், அரசியல் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டு, பொதுமையான மக்கள் நிறுவன மாகக் கூட்டுறவு அமைப்பு விளங்கு வதற்கு இந்த முதற் கொள்கை துணை செய்கிறது. ஜாதி, சமய வேறுபாடற்ற ஓர் ஒருமைஉணர்வை இந்தக் கொள்கை உருவாக்குகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் ஜனநாயக அமைப்புகள். அதனுடைய விவ காரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவ ராலோ அல்லது அவர்களது ஒப்பு தலைப் பெறக்கூடிய வகையில் நிய மிக்கப்பட்டவர்களாலோ நிர்வகிக் கப்படவேண்டும். 'ஓர் உறுப்பினர்-ஒரு வாக்கு' என்கிற சம உரிமைப் பண்பு, பிற வணிகக் குழுக்களில் உள்ள 'ஒரு பங்கு ஒரு வாக்கு' என் கிற நிலைமைக்கு மாறுபட்டது. எனவே கூட்டுறவு மனிதத் தன் மைக்கு முதலிடம் அளிக்கிறது; செல்வத்துக்கு அல்ல.


இதனால், சமத்துவம் உறுதி செய்யப்பட்டு, ஜனநாயகத்துக்கு நிலையான இடம் அளிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் முழு அதிகாரங்களும் சங்க உறுப்பினரைக் கொண்ட பேரவைக்கு அளிக்கப் படுகிறது. பேரவை நிர்வாகக் குழு வைத் தேர்ந்தெடுத்து நிர்வா கத்தை அதனிடம் ஒப்படைக் கிறது. கூட்டுறவு இயக்கத்தில் ஒரு உறுப்பினர் கூட்டத்துக்கு வராம லேயே வாக்களிக்கும் முறைஇல்லை. கூட்டுறவுச் சங்கத்தின் பேரவை தான் மக்களாட்சி மாண்பு மலரும் தொட்டில் என்று கூறலாம்.

உபரியில் பங்கு என்கிறகொள்கை ராக்டேல் முன்னோடிகளின் வெற்றிக்கு ஒரு முக்கியக் காரண மாக அமைநதது. இக்கொள்கை கூட்டுறவுச் சங்கங்கள் வணிக ரீதி யில் இயக்கப்பட வேண்டுமென் பதை வலியுறுத்துகிறது.

கூட்டுறவு இயக்கத்தில் முத லீட்டின் முக்கியத்துவத்தைப் புறக் கணிக்க இயலாது. பொதுவாக கூட்டுறவுச் சங்கங்களில் வசதி குறைந்த மக்கள் அங்கத்தினர் களாகச் சேருகிறார்கள். அவர்கள் சேமித்து வைத்த சிறு தொகை களைப் பங்கு முதலடு செய்யும் போது அவர்கள் பெரும் தியாகத் தைச் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே உறுப்பினர்கள் செய்யும் முதலீட்டுக்கு அளவான வட்டி அளிப்பது அவசியமாகும்.

கூட்டுறவுக் கல்வி என்பது கூட்டு றவு இயக்கத் தத்துவங்களில் முக் கியமான ஒன்றாகும். பொருளா தாரம் ஜனநாயகம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுக் கொள்கையிலும் தொழில் நுணுக்கங்களிலும் மக் களுக்கும் பணியாளர்களுக்கும், அலு வலர்களுக்கும், உறுப்பினர்களுக் கும் கல்வி புகட்ட கூட்டுறவு






அமைப்பு முன் வர வேண்டும். கூட்டுறவு இயக்கம் தன்னிச்சையான அடிப்படையில் இயங்குவதால் உறுப்பினர்கள் சங்கங்களின் தீர்மானங்களையும், செயல்களையும் உரிய முறையல் தெரிந்து கொள்ளத் தொடர்ச்சியாகக் கல்வி அளிப்பது அவசியமாகும். கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றிய தெளிவான கல்வி பெற்ற உறுப்பினர் அச்சங்கத்தின் அழியாத செல்வம் என்றே சொல்லலாம்.

இறுதியாகக் கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு என்பது பரஸ்பர உதவியாகும். எல்லாக் கூட்டுறவு அமைப்புகளும் தங்களுடைய உறுப்பினர்கள், நிர்வாகக்குழுக்கள் இவர்களின் நலனைச் சீரிய முறையில் பாதுகாக்க, மாநில, தேசிய, அனைத்துலக நிறுவனங்களோடு பயனுள்ள வகையில் உறவாட வேண்டும். வலிமையற்றவர்கள் எவ்வாறு கூட்டுறவின் மூலம்வலிமை பெறுகிறார்களோ அவ்வாறே நலிவுற்ற சங்கங்கள் உயர்மட்டக் கூட்டுறவுகளோடு இணைந்து செயலாற்றுவதன் மூலம் வலுவான அமைப்புகளாக மாற வாய்ப்புகள் ஏற்படும். இதனால் மக்களுக்குக் கூட்டுறவின் பணிகள் வலிவும் பொலிவும் பெறுகின்றன.

எனவே கூட்டுறவு என்பது தத்துவம் மட்டும் அல்ல வாழ்க்கைநெறியாகவும்திகழ்ந்து மக்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகும். வெற்று முழக்கமாகவோ, கருத்துக் கோவையாகவோ காற்றில் கரையும் கீதமாகவோ, இல்லாமல், சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் மாமருந்தாக இந்தத் தத்துவம் உதவுகிறது.

**''எல்லோர்க்கும் எல்லாம் என்றிருப்பதான**
**இடம் நோக்கிச் செல்கின்ற திந்த வையம்''**

என்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் அமைக்கும் பணியில் இன்று மனித இனம் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. 'எல்லோரும் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொருவரும் எல்லோருக்கும்' என்ற சமதர்மத் தத்துவ விளக்காக அமைந்தது கூட்டுறவாகும். அந்த நெறியில் சமதர்மச் சமுதாயம் அமைய மனித மனத்தை ஆள்கின்ற சக்தியாக இணைப்புச் சங்கிலியாக இருப்பது கூட்டுறவுத் தத்துவமாகும்.

'எங்கெங்கு காணினும் கூட்டுறவு என்ற சூழ்நிலை நாடெங்கும் உருவாகி வருகிறது. அதற்குக் கூட்டுறவுத் தத்துவம் என்ற வாழ்க்கை நெறிதான் அடித்தளமாக இருந்து வளர்க்கிறது. வழி காட்டுகிறது. கூட்டுறவுடன் இணைந்து வாழும் போதுதான் கூட்டுறவுத் தத்துவம் எப்படியெல்லாம் மனித சமுதாய மேம்பாட்டுக்கு உதவுகிறதென்பது புரியும்.

# எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி



இந்த ஆண்டிற்கான புத்தாண்டு மற்றும் பொங்கல் பரிசாக, தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காப்) 1986-'87-ஆம் ஆண்டிற்கான பெருமைமிகு தேசிய உற்பததித்திறன் விருதினை வென்றுள்ளது. தேசீய அளவில் மாநில கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையங்களில் சிறந்த உற்பத்தித் திறன் சாதனைக்காக இந்த விருதை டான்காப் பெற்றுள்ளது. எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியில் விவசாயிகளுக்கு உறுதுணையாக நின்று உற்பத்தித்திறன் அளவை அதிகப்படுத்தும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள டான்காப்பிற்கு கிடைத்துள்ள அரிதான கௌரவமாகும் இது என்பது குறிப்பிடத்தக்கது. டான்காப்பின் ஆலைகளில் தாவர எண்ணெய் தயாரிக்கபடுகிறது. பாரதப்பிரதமரின் தாவர எண்ணெய் வித்துக்கள் தொழில் நுட்ப தூதுக் குழுவின் நோக்கப்படி தாவர எண்ணெய் வித்துக்கள் துறையில் 1990-ஆம் ஆண்டிற்குள் நமது நாடு தன்னிறைவு அடைவதற்கும் 'டான்காப்' தன் பங்கைச்செவ்வனே ஆற்றிவருகிறது.

**பெருமைமிகு விருது:**

தேசீய உற்பத்தித்திறன் குழு என்பது தொழிற்சாலைகள்மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவை தத்தம் துறைகளில் ஏற்படுத்தும் உற்பத்தித்திறன் சாதனைகளுக்கு விருது வழங்கும் ஒருதேசிய அமைப்பாகும். இந்தியப் பொருளாதாரத்தில் விவசாயத்திற்குள்ள மிகப்பெரும் பங்கைக் கருத்திற்கொண்டு நமது பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஆலோசனைப்படி 1984-'85-ஆம் ஆண்டு முதல் விவசாய உற்பத்திக்கான உற்பத்தித்திறன் விருது வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகம் இந்த விருதுக்கு ஏற்பாடு செய்கிறது. வேளாண்மைத் தொழில்கள், தாவரஉரத்தயாரிப்பு,பால்உற்பத்தி, தோட்டக்கலை வளர்ச்சி, வறட்சி நில விவசாயம், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்ற 11 வகை விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு இந்த விருது வழங்கட்படுகிறது.

**டான்காப் :**

தமிழ்நாட்டின் தாவர எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாவர எண்ணெய் உற்பத்தியை மாற்றி வடிவமைக்கும் திட்டத்தைச்செயல்படுத்த குஜராத் மாநிலம் ஆனந்த் என்னுமிடத்திலுள்ள தேசீய பால்வள வாரியத்தின் நிதிஉதவியுடன் டான்காப் ஒரு மாநில இணையமாக 1-1-1981ல் பதிவு செய்யப்பட்டது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதும், உற்பத்திக் கொள்முதல், எண்ணெய் பிழிதல் மற்றும் சுத்திகரிப்பு, விற்பனை ஆகிய பணிகளில் எண்ணெய் வித்துப் பயிரிடும் விவசாயிகளுக்கு உதவியளித்தலும் மேலும் அவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுவதும்தான் டான்காப்பின் முக்கிய நோக்கங்களாகும். 1986-'87ஆம் ஆண்டில் டான்காப் பின்வருமாறு சிறந்த உற்பத்தித்திறன் சாதனையை அடைந்துளளது.

**உற்பத்தி அளவு :**

சங்க அளவில் சராசரி எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு 218 ஹெக்டேரிலிருந்து 256 ஹெக்டேராக உயர்ந்திருக்கிறது. சங்க அளவில் உறுப்பினர்கள் சராசரி எண்ணிக்கை 1985-'86-ம்ஆண்டில் 112 ஆக இருந்தது. 1986-'87-ம் ஆண்டில் 140 ஆக உயர்ந்ததே இதற்குக் காரணம் ஆகும். கடுமையான வறட்சி நிலவிய போதிலும் ஹெக்டேர் ஒன்றுக்கு 1985-86-ல் 1185 கிலோ கிராமாக இருந்த உற்பத்தி 1986-87-ல் 1190 கிலோ கிராமாக உயர்ந்திருக்கிறது. நவீன முறை விவசாயம் மேற்கொண்டதாலும், பல்வகைபயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாலுமே இந்த உற்பத்தி சாத்தியப்பட்டிருக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட விதைகளின் விநியோகமும் 1985-'86-ல் 372 மெட்ரிக் டன்னாக இருந்தது. 1986-'87-ல் 401 டன்னாக உயர்ந்திருக்கிறது.

உற்பத்திப் பெருக்கத்திற்கு தகுந்த பயிற்சியளிப்பது அவசியமென்பதால், 1986-'87-ம் ஆண்டில் 3904 விவசாய உறுப்பினர்கள் மற்றும் சங்கப்பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கு முந்தைய ஆண்டான 1985-86-ல் 2296 பேர்களுக்கு மட்டுமே பயிற்சியளிக்கப்பட்டிருந்தது. தரமான விதை உற்பத்திக்காக டான்காப் நெய்வேலியில் ஒரு வட்டார உழவு மையத்தை நிறுவி செயல்படுத்தி வருகிறது. இதனை ஒரு தேசிய அளவு வசதியாக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழகம் அங்கீகரித்துள்ளது. இந்த மையத்தில் ஐகிரிசாட் என்னும் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட உயர்மட்ட தொழில்நுட்ப பரிசோதனையில் நிலக்கடலையின் உற்பத்தித்திறன் ஹெக்டேருக்கு 5-

விருந்து 6 டன்கள் வரை உயர்த்தலாம் என்பதுநிரூபிக்கப்பட்டுள்ளது. பல்வேறு அரசுத்துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருள் வசதிகளை 'டான்காப்' செய்து வருகிறது.

**கொள்முதல்:**

1985-'86-ஆம் ஆண்டில் 10427 மெட்ரிக் டன் அளவுக்கு இருந்த நிலக்கடலை கொள்முதல் 1986-87 ஆண்டில் 20649 மெட்ரிக்டன் அளவுக்கு உயர்ந்தது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் எண்ணெய் வித்துக்கள் முழுவதையும் டான்காப்பிடம் விற்பனை செய்வதை ஊக்கப்படுத்துவதற்காக நிலக்கடலை டன் ஒன்றுக்கு ரூ. 150- கொள்முதல் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நிலக்கடலைக்கு சந்தைவிலை அளிக்கப்படுவதோடு இந்த கொள்முதல் ஊக்கத்தொகையானது கூடுதலாக அளிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. நுகர்வோர்களிடமிருந்து பெறப்படும் ஒரு ரூபாயில் 85 பைசாவை டான்காப் விவசாய உறுப்பினர்களுக்கு போய்ச்சேரும்படி செய்கிறது என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த வகையில் பார்த்தால் பால் உற்பத்தியாளர்களுக்குக்கூட ஒரு ரூபாய் வருமானத்தில் 70 பைசா அளவுக்கு போய்ச் சேர்கிறது. ஆனால் எண்ணெய் வித்து பயிரிடுவோருக்கு இதைவிட கூடுதலாக 84 பைசா அளவுக்கு டான்காப்பால் வழங்கப்படுகிறது. இடைத்தரகர்களை அறவே ஒழித்ததனால்தான் டான்காப்பில் இந்த சாதனை செய்ய முடிந்திருக்கிறது.



**எண்ணெய் பிழிதல் சுத்திகரித்தல்**

திருவண்ணாமலையிலும் விருத்தாசலத்திலும் உள்ள பதனிடும் ஆலைகளில் 1986-87-ம் ஆண்டில் உயர் அளவு கொள்திறன் பயன்பாட்டுச் சாதனையை டான்காப் ஏற்படுத்தியுள்ளது. பதிய முறைகளைக் கையாண்டு இயந்திரங்களில் பழுது ஏற்படுவதைக் குறைத்ததனால்தான் இந்த சாதனையை எய்த முடிந்திருக்கிறது. எண்ணெய் பிழியும் பிரிவில் முந்தைய ஆண்டு கொள்திறன் பயன்பாடான 42.9 சதவிகிதத்திலிருந்து 80 சதவிகிதத்திற்கு) கொள்திறன் பயன்பாடு 1986-'87-ம் ஆண்டில் உயர்ந்திருக்கிறது. டான்காப்பில் ஆலைகளில் தடுப்புப் பாதுகாப்பு பராமரிப்புத்திட்டங்களைப்புகுத்தியதன் மூலம் இயந்திரப்பழுதைப் பெருமளவுக்குக் குறைத்ததுடன், இயந்திரங்களின் முழு பயன் அளவுக்கும் சாதனையையும் ஏற்படுத்த டான்காப்பால் முடிந்திருக்கிறது. டான் ஆலைகளில் உற்பத்தியை மேலும் அதிகப்படுத்தும் நோக்கத்துடன் தொழிலாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து டான்காப் பரிசீலித்து வருகிறது. இதன் மூலம் ஒவ்வொரு தொழிலாளியும் முனைந்து செயல்பட்டு இயந்திரங்களை அவற்றின் முழு கொள்திறன் அளவுக்குப்பயன்ப[illegible]ச் செய்வதோடு நேரம் வீணாவதையும் தவிர்க்க முடியும்.

டான்காப்பின் ஆலைகளில் கடலைத்தோலை கொதிகலன்களுக்கான எரிபொருளாகப் பயன்படுத்தி வெற்றி கண்டிருப்பதன் மூலம் எரிசக்தி பெருமளவுக்கு மிச்சப்படுத்தப்பட்டிருக்கிறது.

டான்காப் தனது நிதியை வெறுமனே முடக்கி வைப்பதில்லை. அதனை வங்கிகளில் கேட்பு வைப்புகளாக முதலீடு செய்து கணிசமான அளவுக்கு வட்டி பெறப்படுகிறது. வங்கி உத்திரவாதம், கேட்பு வரைவுகள் பெறுவது போன்ற வசதிகளையும் வணிக வங்கிகளிடமிருந்து அதற்குரிய தரகுச் செலவினங்கள் மற்றும் குறியீட்டு வைப்புத்தொகையேதுமில்லாமலும் டான்காப் பெற்று வருகிறது. திறமையான நிர்வாகத்தின்காரணமாக டான்காப் 1986-87-ஆம் ஆண்டிற்கு தோராயமொத்த லாபமாக ரூ. 217.14 இலட்சம் ஈட்டியுள்ளது. 1985-'86-ம் ஆண்டின் லாபம் ரூ. 86.38 இலட்சமாகும்.

இவ்வாறாக அனைத்துப் பிரிவுகளிலும் டான்காப் தனது ஒட்டுமொத்த உற்பத்தித்திறன் சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

## கதர்-கிராமத் தொழிலில்...

நாட்டில் சென்ற முப்பது வருடங்களில் கதர், கிராமத் தொழில்களுக்காக ரூ. 602.16 கோடி முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ மானியங்களும் இந்த அளவோ, அல்லது கூடுதலாகவோ அளிக்கப்பட்டுத்தான் இருக்கும். வருடந்தோறும் உற்பத்திப் பெறுமானம் ரூ. 1316.72 கோடிக்கும், விற்பனை ரூ. 1417.07 கோடிக்கும் ஆகி வருகின்றன. சுமார் 40.70 லட்சம் பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். உற்பத்தி வேலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் சுமார் 402.08 கோடி ரூபாய் ஊதியமாகத் தரப்படுகிறது. சராசரி ஒரு தொழிலாளியின் ஆண்டு வருமானம் சராசரி ரூ. 995/- என ஆகியுள்ளது.



குமரியின் பெருமைக்கு...

# கூட்டுறவு வங்கியின் பணிகள்

தமிழ்நாட்டின் தென்கோடியிலே அமைந்துள்ள குமரி மாவட்டத்தில் எங்கு நோக்கினாலும் பசுஞ் சோலைகள் கண்டோர் கண்களை மயக்கச் செய்யும் வளம் பொருந்தியவை. மலை வளமும் மண் வளமும் இம்மாவட்டத்தின் சொததுகள், வானளாவ்ய கோட்டைகள பல காட்சிதரும் இம் மாவட்டம் பெருமைபடைதத மன்னர்களால் ஆளப்பட்டு தொன்மை மிக்க வரலாறு படைத்தது. ஆடி அசைந்து வரும் தென்றல்ன குளிர்ச்சியும் முக்கனிகளின் தீஞ்சுவையும் இம்மாவட்டத்திற்கு வருவோரைக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் படைத்தவை.

நிகரில்லா நீர்வளம் கொண்ட இம் மாவட்டம் கல்விச்செல்வத்தையும், கலைச்செல்வத்தையும்கொண்டது. இத்தகைய குமரிமாவட்டத்தில் நடு நாயகத்தில் அமைந்து தொன்மை மிக்க நாகராஜா கோயிலையும், சிறப்புமிக்க தூய சுவேரியார் கோயிலையும் சிறப்பு அம்சங்களாகக் கொண்டு விளங்குவது நாகர் கோவில், இந்த ஊரின் மத்தியிலே அமையப்பெற்று நலிந்தோர் துயர் துடைக்கதன் நேசக்கரங்களைநீட்டி, எல்லோர் வாழ்விலும் வளம் சேர்க்கும் பணிகளைச் செய்து, இம் மாவட்டத்திற்கு மேலும் சிறப்பைச் சேர்க்கிறது கன்னியாகுமரிமாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, மக்கள் வாழ்வு மலரத் தன் பணிகளைச் சிறப்புறச் செய்து சாதனைகள் படைத்துவரும் இவ்வங்கி, சின்னஞ் சிறு மாவட்டத்தின் ஒளி வீசும் வங்கியாகும்.

நலிந்தோர் வாழ்விலே வளம் சேர்க்கும் பணிகளைச் சிறப்போடு செய்து வருகிறது கூட்டுறவு இயக்கம். இந்த இயக்க வளர்ச்சியில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் நல்லமுறையில் வேரூன்றிச் சாதனைகள் நிகழ்த்தி வரும் மாவட்டம் குமரி மாவட்டம், கூட்டுறவு இயக்கத்தின் ஓர் அங்கமாக அமையப்பெற்று இயக்க வளர்ச்சியில் தன் பங்கைச்செவ்வனே செய்து நலிந்தோர் துயர் துடைக்க முனைப்போடும் வேகத்தோடும் செயலாற்றி வருகிறது. கன்னியாகுமரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழும் ஏழை எளிய மக்களின் பொருளாதாரம் ஏற்றம் பெற தன் பங்கைச் சிறப்பாகச் செய்து, இம்மாவட்ட மக்களின் அல்லல் போக்கி வருகிறது.

இந்த வங்கி, 5-9-'57-இல் பதிவு செய்யப்பட்டு 14-9-57- முதல் பணி துவங்கப்பட்டது. இம்மாவட்டத்தில்கூட்டுறவு இயக்க சிந்தனையைத் துளிர விட்ட மாவட்டக் கூட்டுறவு இயக்க முன்னோடியான திரு கே. எம். பூதலிங்கம் பிள்ளையவர்களை, முதல் தலைவராகப் பெற்ற இவ்வங்கி, மாவட்டக் கூட்டுறவுத் தந்தை எனப் போற்றப்படும் திரு. எல். இராமச்சந்திர நாடார் மற்றும் கூட்டுறவாளர்கள் திரு எம். சி. பாலன், திரு. ஜி. டானியேல், திரு ஜி.சீ. மைக்கேல்ராஜ் போன்ற தலைவர்களால் வழி நடத்தப்பட்டு தழைத்துவளர்ந்தது.

முன்னோடிகளின் சீரிய வழியில் திரு. சி. வண்ணமுத்து பிள்ளை முதற்கொண்டு திரு. டி. தேவனாயகம் ஈறாக பல செயலர்கள் இவ்வங்கியின் வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றியுள்ளனர்.

5-12-'86-இல் தனி அலுவலராகப் பொறுப்பேற்றுள்ள திரு. பி.கங்காதரன் அவர்களின் சீரிய முயற்சியால் இவ்வங்கி, தனதுபணிகளைத் துரிதப்படுத்தி, விரிவாக்கி, வலுவாக்கி இம்மாவட்டத்தில் மாநிலத்தின் சாதனைகளைப் புரிந்து மக்கள் குறைகளை நீக்கி வருகிறது.

1957-58-இல் 41 தனி நபர் 196 கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினராகக் கொண்டு துவங்கிய இவ்வங்கி 30-6-'86-இல் 19860 உறுப்பினர்களுடன் 1,14,36,825 ரூபாய் பங்குத்தொகையுடன் வேகமாக வளர்ந்து வருகிறது.

இவ்வங்கி வாடிக்கையாளர்களின் வசதியை முன்னிட்டு நகரில் காலை மற்றும் மாலைநேரக் கிளை ஒன்றினை நடத்தி வருகிறது. கன்யா டெப்பாசிட், திருமண டெப்பாசிட், மறு முதலீட்டுத் திட்டம் போன்ற பலவகைச் சிறப்பம்சங்கள் பொருந்திய டெப்பாசிட்டுகளைச் சேர்க்கிறது.

இவ்வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள 117 தொடக்கக் கூட்டுறவு வங்கிகளின் வாயிலாகப் பெறப்படும் டெப்பாசிட்டுதாரருக்கு ரூபாய் 30,000 வரை உத்தரவாதம் அளிக்கிறது.

1-4-'87-முதல் பணப் பத்திரத் திட்டம் அமல்படுத்தப்பட்டது.

**பரிசும் பாராட்டும்**


இவ்வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாவட்டத்திலுள்ள எல்லா தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்கிய கடன்களைவிட அதிகமான கடன்களை வழங்கி, தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசும் பாராட்டும் பெற்று வருகிறது.

1978-79, 1982-83, 1983-84 மற்றும் 1987-ஆண்டுகளில் மாநிலத்திலேயே சிறந்த மத்தியக் கூட்டுறவு வங்கியாகத் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கேடயத்தினைப் பெற்று வருகிறது.

1986-'87ஆம் ஆண்டு கேட்பில், 98.91 விழுக்காடுகள் வசூல் செய்து சாதனை புரிந்து தேசிய அளவில் வசூலில் சிறந்த கூட்டுறவு மத்திய வங்கியாகத் தேர்வு செய்யப்பட்டு பாராட்டுகள் குவிந்துள்ளன.

**எதிர்காலத் திட்டங்கள்**

இவ்வங்கியின் தனி அலுவலர் திரு. பி. கங்காதரன் அவர்கள் இவ்வங்கியின் எதிர்காலத் திட்டங்களைப் பற்றி "கேட்பில் 100 விழுக்காடுகளையும் வசூல்செய்துசாதனை புரியவும், வங்கிப்பணி செய்ய ஒரு நடமாடும் வங்கியை ஏற்படுத்தவும், மாவட்டத்திலுள்ள இதர முக்கிய நகரங்களில் வங்கியின் கிளைகளை ஆரம்பிக்கவும்" திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.



**இதர பணிகள்**

இவ்வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள புத்தளம் ஆரம்பக்கூட்டுறவு வங்கி தொடர்ந்து ஏழாவது முறையாகவும், முட்டக்காடு ஜவகர் ஆரம்ப கூட்டுறவு வங்கி தொடர்ந்து 3-ம் முறையாகவும், மாவிளை, கீழ்குளம், ஆனான்விளை ஆகிய ஆரம்பக் கூட்டுறவு வங்கிகள் முதல் முறையாகவும் உறுப்பினர்கள் தவணை தவறிய கடன்கள் முழுவதையும் வசூல் செய்து சாதனை நிகழ்த்தியுள்ளன.

மாநிலத்திலுள்ள 26 உழவர் பணிக்கூட்டுறவுச் சங்கங்களில் இரண்டு இவ்வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. கருங்கல் உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கத்தில் சாக்கட்டி உற்பத்தி அலகும், நலக்குளம் இரணியல் உழவர்பணிக் கூட்டுறவுச் சங்கத்தில் கயிறு உற்பத்திஅலகு மற்றும் ஏத்தன்வாழைக்காய் சீவல் உற்பத்தி அலகு ஆகியவையும் இவ்வங்கியின் நிதியுதவியுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

பத்தளம் ஆரம்பக் கூட்டுறவு வங்கியும், முட்டக்காடு ஜவகர் ஆரம்பக் கூட்டுறவு வங்கியும் 'சிட்பண்ட்' நடத்தும் உரிமை பெற்று இவ்வங்கியின் நிதியுதவியுடன் திறம்படச் செயல்பட்டுவருகின்றன.

தொடர்ந்து 'ஏ' வகுப்பில் செயல்பட்டு வரும் இவ்வங்கியின் சேவைகளில் இம்மாவட்ட மக்கள் நிறைந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். பலவிதக் கடன்களைப் பெறுவதற்கும் தங்கள் கையில் உள்ள பணத்தை இந்த வங்கியில் சேமிப்பதற்கும் மாவட்டத்தில் பல பகுதியிலிருந்தும் மக்கள் குவிந்தவண்ணம் உள்ளனர்.

இவ்வங்கி 1986-'87-இல் 742 இலட்சம் ரூபாய் அளவுக்கு வைப்புகள் பெற்றுள்ளது. 5299 இலட்ச ரூபாய் அளவுக்குக் கடன்கள் வழங்கி, 4975 இலட்ச ரூபாய் அளவுக்குக்கடன் வசூல் செய்துள்ளது. கேட்பில் 1 சதவீத அளவுக்கே தவணை தவறியுள்ளது. அதாவது 99 சதவீதம் வசூலாகியுள்ளது என்ற சாதனையை இவ்வங்கி படைத்துள்ளது.

குறுகிய கால, மத்திய கால நகையீடு, சிறுதொழில் நுகர்வோர், கட்டுமர எஞ்சின், லாரி வாங்குதல் எனப்பல காரியங்களுக்கான கடன்களையும் இவ்வங்கி வழங்கி நற்பெயர் ஈட்டியுள்ளது.

கூட்டுறவு வார விழாவினை யொட்டிச் சிறப்புச் சாதனை புரிந்தமைக்காகத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் பாராட்டுக் கேடயத்தையும் இவ்வங்கி பெருமையுடன் பெற்றுள்ளது.

குமரி மாவட்டம் சிறிய மாவட்டம்தான், முக்கடலும் சங்கமமாகும். இம்மாவட்டத்தில் அமைந்துள்ள வங்கி சாதனைகளின் சங்கமமாக அமைந்து தமிழகத்தின் தென்கோடியில் கொடிகட்டிப் பறக்கிறது. சிறிய மாவட்டத்தில் ஒளிரும் இவ்வங்கி எளியோர் இருள் கற்றும் பணியில் தொடர்ந்து முன்னேறும் என்பது உறுதி.



# நத்தம் பகுதியில் பால் உற்பத்தி

அண்ணா மாவட்டத்தில் இயற்கை எழில் கொஞ்சும் பகுதி நத்தம் வட்டமாகும். நத்தம் பேரூராட்சியில் இணைந்தது நத்தம் கோவில்பட்டி கிராமம். நத்தம் கோவில்பட்டி, திண்டுக்கல்லிலிருந்து 35 கி.மீ. தொலைவிலும், மதுரையிலிருந்து 38 கி.மீ. தொலைவிலும் உள்ளது. மணிமுத்தாற்றின் ஒரு கரையில் நத்தமும், மறுகரையில் நத்தம் கோவில்பட்டியும் அமைந்துள்ளதாலும், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் இங்கே அமைந்துள்ளதாலும், இது நத்தம் கோவில்பட்டி என்ற பெயருடன் விளங்கி வருகிறது. குன்றுகள் சூழ்ந்து இப்பகுதியில் தென்னை, மா, புளி, கொய்யா முதலிய தோப்புகளின் காட்சியும், குன்றுகளின் அமைப்பும் மனத்திற்கு இதம்அளிப்பனவாகும். எனினும் இப்பகுதியில் விவசாயம் மழையை நம்பியுள்ளது. மானாவாரி பயிர்கள் அதிக அளவில் பயிர் செய்யப்படுகின்றன.

பஞ்சாலைகளோ, ஏனைய தொழிற்சாலைகளோ இப்பகுதியில் இல்லை. பருவமழை தவறினால், பெரும்பான்மையான மக்கள் கூலி வேலை செய்து பிழைக்க வேண்டிய நிலை. நத்தம் கோவில்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் இப்பகுதிவாழ் மக்களுக்கு பால் பண்ணை உபதொழிலினை அமைத்துக்கொடுத்து, கடந்த இருபது ஆண்டுகளாகச் சிறப்பான சேவையினைச் செய்து மக்களிடையே நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கி வருகிறது.

சிறு விவசாயிகளுக்கு உபதொழிலினை ஏற்படுத்துவதுடன், வேலைவாய்ப்பு இல்லாத ஏழை எளிய மக்களுக்கு வருவாயைத் தேடிக் கொள்ள வகை செய்ய வேண்டும் என்ற பெருநோக்குடன், இச்சங்கம் 26-6-66இல் வேலையினைத்துவக்கியுள்ளது. இச்சங்கத்தின் செயல்படும் எல்லையில், நத்தம், அக்ரகாரம் கோவில்பட்டி, வேலம்பட்டி, செல்லப்ப நாயக்கன்பட்டி, இடையப்பட்டி, பாப்பாபட்டி, நடுமண்டலம், ஆவிச்சிபட்டி ஆகிய கிராமங்கள் உள்ளன. சங்கம் ஆரம்பத்தில் 51 உறுப்பினர்கள் ரூ. 1050 பங்குத் தொகையுடன் இருந்து தின சராசரி பால் உற்பத்தி 200 லிட்டராக இருந்தது. தற்போது 2043 உறுப்பினர்களுடன் ரூ. 33,350 பங்குத்தொகையுடன், தின சராசரி 1860 லிட்டர் பால் உற்பத்தி செய்து வருகிறது.

சங்கத்தின் செயல்படு எல்லையில் உள்ள கிராமத்தில் 17 கறவைக் கூடங்கள் நிறுவப்பட்டு, பால் சேகரிப்புக் கிளைகளாகப் பணிபுரிந்து வருகின்றன. இக்கிளைகளுக்குச் சங்கத்தின் பணியாளர்கள் காலையிலும் 3 மணிக்கே சென்று உறுப்பினர்களின் பால் மாடுகளைக் கறவை செய்து பாலினைச் சேகரித்து சங்கத்தின் தலைமையிடத்திற்குக்கொண்டு வருகிறார்கள். உறுப்பினர்களிடமிருந்து பால் பரிசோதனை செய்யப்பட்டு கொழுப்புச் சத்து அடிப்படையில் கொள்முதல் செய்யப்படுகிறது.

ஒரு கிலோ கொழுப்பு மற்றும் இதர சத்திற்கு ரூ. 23 என்ற விகிதத்தில் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சங்க உறுப்பினர்களுக்கு 15 தினங்களுக்கு ஒரு முறை பால் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. சங்க எல்லையில் உள்ள கிராமங்களிலுள்ள பொது மக்களின் தேவைக் கேற்பவும், நத்தம் பேரூராட்சியின் மக்களின் தேவைக்கேற்பவும் பால் விநியோகம் செய்யப்படுகிறது. நத்தம் பேரூராட்சி எல்லைக்குள் மட்டும் பால் சேகரிப்பு நிலையங்கள் 8 உள்ளன.

பொதுமக்களுக்குக் கூப்பன் மூலம் பால் விநியோகம் செய்யப்படுவதுடன், ரொக்கத்திற்கும் விற்பனை செய்யப்படுகிறது. பால் லிட்டர் 1-க்கு ரூ. 4 வீதம் விற்பனை செய்யப்படுகிறது. குறித்த நேரத்தில் பொதுமக்களுக்குத் தரமான பால் விநியோகம் செய்வதில் சங்கம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. உள்ளூர்த் தேவைபோக எஞ்சியுள்ள பால் முழுவதும் காலையிலும் மாலையிலும் சுமார் 7.30 மணி அளவில் லாரியில் அண்ணா மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஒன்றியம் 1 கிலோ கொழுப்பு மற்றும் இதர சத்திற்கு ரூ. 24 வீதம் விலை நிர்ணயம் செய்து, சங்கத்திற்கு

வழங்கி வருகிறது. சங்கத்தின் தினசராசரி பால் உற்பத்தியாகிய 1860 லிட்டரில் உள்ளூரில் 700 லிட்டர் விற்பனை செய்தது போக, 1160 லிட்டர் பால் அண்ணா மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு தினமும் அனுப்பி வைக்கப்படுகிறது.

சங்கம், நத்தத்தில் இரண்டு இடங்களிலும், நத்தம் கோவில்பட்டியில் இரண்டு இடங்களிலும் தேநீர் நிலையங்கள் நிறுவியுள்ளதுடன், இரண்டு நடமாடும் தேநீர் நிலையங்களையும் ஏற்படுத்தி, பொது மக்களுக்குத்தரமான டீ, காபி, பால் போன்றவைகளைச் சுகாதார முறையில் தயார்செய்துகுறைந்தவிலையில் விநியோகம் செய்து வருகிறது. நடமாடும் தேநீர் நிலையங்கள் அரசு அலுவலகங்கள், வங்கிகள், பள்ளிகள், மருத்துவமனைகள், இதர தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் ஆகியவர்களின் வசதிக்காக, அவர்களைத் தேடிச் சென்று சேவை செய்வது குறிப்பிடத்தக்கதாகும். இந்தத் தேநீர் நிலையங்களில் நாளொன்றுக்குச் சுமார் 210 லிட்டர் பால் வரை டி, காபி, பால் போன்றவை தயார் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

கறவை மாடுகள் வைத்திருந்த பால் கறக்கும் உற்பத்தியாளர்கள் மட்டுமே சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகிறார்கள்.

பால் உற்பத்தியிலும் தரத்திலும் சங்கத்தின் நிர்வாகக்குழுவும் பணியாளர்களும் தனிக் கவனம் செலுத்து வருகிறார்கள்.

சங்கத்தின் நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு எந்தவிதமான கடனோ முன்பணமோ வழங்கப்படுவதில்லை.

உறுப்பினர்களிடமிருந்து தினமும் பால் பரிசோதனை செய்யப்பட்டு, கொழுப்புச் சத்து அடிப்படையில் விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்யப்படுகிறது.

உறுப்பினர்கள் தங்களுக்குள் கூட்டுப் பொறுப்பில் உள்ளூரில் உள்ள வங்கிகள் மூலம் நேரடியாகவே கடன் உதவியினைப் பெறக் கறவை மாடுகளை வாங்கிக் கொள்ளுகிறார்கள். அவர்களது பால் பணத்திலிருந்து வங்கிக்குரிய தொகையை ஒவ்வொரு பட்டுவாடாவின் போதும் சங்கம் பிடித்தம் செய்து உடனுக்குடன் அனுப்பி வைக்கிறது.

சங்கத்தில் செயற்கைக் கருவூட்டல் பயிற்சி பெற்ற கிராம அலுவலர் ஒருவர் உறைவிந்து மூலம் சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்குப் பருவத்தே சினை ஊசி போட்டு செயற்கை இனவிருத்திக்கு பேருதவி செய்து வருகிறார். மாதத்திற்குச் சராசரி 50 சினை ஊசிகள் வரை போடப்படுகின்றன.

ஒன்றியத்திலிருந்து கால்நடை மருத்துவர் மாதம் இருமுறை சங்கத்திற்கு வந்து சங்க உறுப்பினர்களின் மாடுகளைப் பரிசோதித்து மருத்துவம் செய்வதுடன் அவ்வப்போது மருத்துவ ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்.

சங்கம் ஒன்றியத்திலிருந்து கால்நடைக் கலப்புத் தீவனம் பெற்று உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்து வருகிறது. மாதம் ஒன்றுக்கு சராசரி 60-லிருந்து 100 மூட்டைகள் வரை உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

கன்று வளர்ப்புத் திட்டத்தின் கீழ், உயர்ரக ஜெர்சி கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு மானிய உதவியுடன் கன்று தீவனம் வழங்கப்படுகிறது.

சங்கத்தின் உறுப்பினர்களுக்கு நிகர இலாபத்தில் 50 சதவிகிதம் போனஸ் வழங்கப்படுவதுடன் அவர்கள் வழங்கும் பாலுக்கு ஆண்டுதோறும் ஊக்க விலை வழங்கப்படுகிறது.

1986-'87-இல் ஊக்க விலையாக ரூ. 87,058- ம் 1987-'88-ஆம் ஆண்டு ரூ. 97,802- ம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளன.

சங்கப் பணியாளர்களுக்கு ஆண்டொன்றுக்கு 20 சதவிகிதம் போனஸ் வழங்கப்படுவதுடன், ஒரு மாத ஊதியத்தை ஊக்க ஊதியமாக வழங்கி வருகிறது.

சங்கப் பணியாளர்களுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு இணை சீருடை வழங்கப்படுகிறது.

சங்க சிப்பந்திகள் நலன் கருதி மழைக் காலங்களில் பணியாளர் உபயோகத்திற்காக மழைக் கோட்டுகள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகின்றன.

சங்கம் 1966-67-லிருந்து இன்று வரை தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. 1986-'87-ஆம் ஆண்டு நிகர லாபமாக ரூ. 37,864 ஈட்டிய போதிலும், 1987-'88-இல் 70,000 நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.

சங்கம் தனக்குச் சொந்தமாக 12.5 செண்ட் இடத்தில் கறவைக் கூடத்துடன் இணைந்த அலுவலகக் கட்டடம் ஒன்றைக் கட்டியுள்ளது.

சங்கம் தற்போது 2043 உறுப்பினர்களுடன் ரூ. 33,350 பங்குத் தொகையுடன், 1860 லிட்டர் பால் உற்பத்தியுடன் இயங்கி வருகிறது.

மேற்கூறிய சிறப்பியல்புகளின் காரணமாக 1985-'86-ஆம் ஆண்டு இம்மாவட்டத்தில் சிறந்த சங்கமாகவும், 1986-'87-ஆம் ஆண்டில் தமிழகத்திலே சிறந்த சங்கமாகவும் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் பெற்றுள்ளது. சங்கம் ஒன்றியத்திற்குச் சீராகப் பால் அனுப்பி வந்ததைப்பாராட்டி ஒன்றியம் கலர் டி. வி. ஒன்றினைச் சங்கத்திற்குப் பரிசாக அளித்துள்ளது.

இப்பகுதியில் இயங்கி வருகின்ற வலிமைமிக்க தனியார் பால் வியாபாரிகளின் கடுமையான போட்டிக்கிடையே இவ்வளவு முன்னேற்றம் இச்சங்கம் கண்டிருப்பது சங்கத்தின்பால் உறுப்பினர்கள் வைத்துள்ள நம்பிக்கையும், பற்றுதலும், நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தன்னலம் கருதாத சேவையும், சங்கப் பணியாளர்களின் சலியாத உழைப்புமாகும்.



# சேலம் கூட்டுறவு வங்கியின் சீரிய பணிகள்

சேலம் மாவட்டத்தைக்கூட்டுறவு இயக்கத்தின் 'மெக்கா' என்று கூறுவார்கள். கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றில் சேலம் மாவட்டத்திற்குப் பெரும் பங்கு உண்டு.

சேலம் நகரக் கூட்டுறவு வங்கி இந்த மாவட்டத்தில் முதன் முதலாகக்கூட்டுறவு முறையில் வங்கிப் பணிக்காக 1-3-1906-ஆம் ஆண்டு பதிவு செய்யப் பெற்று, 11-3-1906-ஆம் ஆண்டு செயல்புரியத் துவங்கியது. இவ்வங்கி மாநில அளவில் செயல்படும் நகரக்கூட்டுறவு வங்கிகளில் சிறந்த நகரக்கூட்டுறவு வங்கியாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

முதன் முதலில் சேலம் நகர மக்களுக்கும், சுற்றியுள்ள கிராம மக்களுக்கும் நகரக் கூட்டுறவுச் சங்கமாக தனது சேவையை மேற்கொண்டு வந்தது. பின்னர் 1948-ஆம் ஆண்டு முதல் நகர கூட்டுறவு வங்கியாகச் செயல்படத்துவங்கியது. தொடக்கத்தில் இந்திய விடுதலைப் போராட்டவீரர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இதில் நம்நாட்டில் முதல் கவர்னர்ஜெனரல் ஆக சேவை புரிந்த காலம் சென்ற திரு ராஜாஜி அவர்களும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய திரு. விஜயராகவாச்சாரியார் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கி செயல்படத் துவங்குவதற்கு முன்னதாக, இந்த வங்கியே மேற்படி மத்தியக்கூட்டுறவு வங்கியின் பணிகளையும், குறிப்பாக கிராமக்கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதையும் மேற்கொண்டு வந்தது. சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கி செயல்படத் துவங்கிய பின்பு சேலம் நகர மக்களுக்கு மட்டும் கடன் வழங்கியும், மற்றும் இதர வங்கிப் பணிகளை மேற்கொண்டும் வருகிறது.

துவக்க காலத்தில் 27 உறுப்பினர்களுடன் இயங்கி வந்த இவ்வங்கியில் 30-11-'87-ந் தேதியில் 19343 'ஏ' வகுப்பு உறுப்பினர்களையும், 647 'பி' வகுப்பு உறுப்பினர்களையும் கொண்டு, ரூ.64.40 இலட்சம் செலுத்தப்பட்ட பங்குத் தொகையைக் கொண்டுள்ளது. இவ்வங்கியில் பெறப்படும் தவணை இட்டு வைப்பு, திருவிளக்கு இட்டு வைப்பு (மறு முதலீட்டுத் திட்டம்), தொடர் இட்டுவைப்பு, மாங்கனி இட்டு வைப்பு, ஓய்வுகால வைப்பு, வீட்டு உண்டியல் இட்டு வைப்பு, சேமிப்புமற்றும்நடப்புக் கணக்குகள் ஆகியவற்றில் நாளது தேதியில் ரூ.13.44 கோடி நிலுவையுள்ளது. 1986-'87-ஆம் ஆண்டில் மட்டும் பெறப்பட்டவைப்புத் தொகை ரூ. 12.29 கோடியாகும். இந்தவைப்புத் தொகையிலிருந்து இவ்வங்கி வழங்கும் அனைத்துக் கடன்களும்(நகைக் கடன் தவிர) சொந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வங்கி வழங்கும் கடன்களில் அதிகமான கடன் நகை யீட்டின்பேரில் வழங்கப்பட்டாலும் குறிப்பாக, தொழில் வளர்ச்சி, சிறு வியாபாரம், வீடு மராமத்து, சுய தொழில் புரிதல், வாகனங்கள் வாங்குதல், நுகர்பொருள் வாங்குதல், மற்றும் பயணிகள் பேருந்து, லாரி, வேன் மற்றும் ஆட்டோ போன்ற வாகனங்கள் வாங்கவும், கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர நல்வுற்ற பிரிவினருக்கு 4 சதம் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டுள்ளது. நாளது தேதியில் அனைத்துக் கடன்களின் நிலுவை ரூ. 12.58 கோடியாகும். 1986-'87-ஆம் ஆண்டில்மட்டும் வழங்கப்பட்டகடன்கள் ரூ. 12.61 கோடியாகும்.

இவ்வங்கி தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது. வளர்ந்து வரும் இந்த வங்கியின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் லாபத்தில் இயங்கி வருகிறது. 1984-85-ல் ரூ. 12.74 இலட்சமாக இருந்த லாபம் 1986-87-ல் ரூ. 24 இலட்சமாக உயர்ந்துள்ளது.

வாடிக்கையாளர்களின் வசதியினைக் கருத்தில்கொண்டு மாநிலத்தில் முதல்தர கூட்டுறவு வங்கியாக இந்த வங்கியில் 28-9-87 முதல் உடனடி பணப்பட்டுவாடா முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. வங்கியின் தலைமையகத்தைத் தவிர வங்கிக்கு குகை, அரிசிப்பாளையம், பொன்னம்மாபேட்டை மற்றும் அஸ்தம்பட்டி ஆகிய இடங்களில் 4 கிளைகள் உள்ளன. சிறு தொழில் நிலையங்களுக்கு நிதி உதவி உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் சம்பந்தப்பட்ட கடன் மனுக்களை விரைவில் தீர்வு செய்ய வங்கியின் தலைவர் அவர்களின் தலைமையில் ஒரு தொழில் நுட்பக்குழு செயல்பட்டு வருகிறது.

வங்கியின் நிர்வாகம் தேர்ந்தெடுக்கப் பெற்ற நிர்வாகக் குழு உறுப்பினர்களால் டாக்டர் கே. ராமசாமி பிள்ளை அவர்களின் தலைமையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. வங்கியின் தலைமை அலுவலகம் சேலம் நகரத்தின் மையப் பகுதியில் கட்டப்பட்ட சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. வங்கிக்கு 5-வது கிளையாக உடையப்பட்டியில் விரைவில் ஒரு கிளை திறக்கப்படவுள்ளது. வங்கியின் இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணம் இதன் உறுப்பினர்களும் வாடிக்கையாளர்களும் என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனெனில் தொடர்ந்து வைப்புகளை இட்டு வைப்பதிலும், மற்றும் கடன் தவணைகளைச் சட்டபூர்வ நடவடிக்கைக்கு முன்னதாக உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துவதிலும் இவர்களின் ஒத்துழைப்பே காரணம். அதிகரித்து வரும் வங்கிகளின் வியாபாரத்தில் வங்கிப் பணியாளர்களின் பணியும் குறிப்பிடத்தக்கதாகும்.

1985-'86-ஆம் ஆண்டில் மாநிலத்தில் சிறந்த நகரக்கூட்டுறவு வங்கியாகத் தேர்ந்தெடுத்த தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் கேடயம் வழங்கப்பட்டதுபோல், 1986-'87-ஆம் ஆண்டிலும் சிறந்த நகரக்கூட்டுறவு வங்கியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கேடயம் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர 1986-87-ஆம் ஆண்டிற்கு சேலம் மாவட்ட அளவிலும் முதல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

வங்கியின் சேவை மேன்மேலும் அதிகரிக்கும் பொருட்டு நகரில் மையப் பகுதியில் மகளிர்க்காகத் தனிகிளை ஒன்று திறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொடர்ந்து அதிகபட்சமாக 12 சதம் டிவிடெண்ட் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 1885-86-ஆம் ஆண்டிற்கு 15 சதம் ஆக உயர்த்தி அனுமதிக்க அரசுக்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. வங்கிப் பணியாளர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மேல் அதிகபட்ச 20 சதம் போனஸ் வழங்கப்பட்டு வருகிறது.

தொன்மையான தொடக்கம், அமைப்பான வளர்ச்சி, அழுத்தமான பணிகள், திறமையான தலைமை, வளமையான எதிர்காலம், வந்துகுவியும் வெற்றிகள், இத்தனைக்கும் முன்னோடியாகத் திகழ்வது சேலம் நகரக் கூட்டுறவு வங்கி.



# கூட்டுறவு அமைப்பில் வளரும் பனைத் தொழில்

தமிழ்நாட்டில் 1948-இல் முழுமையான மதுவிலக்கைச் செயல்படுத்தியபோது மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கக் கூட்டுறவு முறையே சிறந்ததெனக் கருதப்பட்டது. இதனபடி கிராம அளவில் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

தற்போது 3.65 இலட்சம் உறுப்பினர்களையும், ரூ. 61.49 இலட்சம் பங்குத் தொகையையும் கொண்ட 1615 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. மாவட்ட அளவில் ரூ. 39.28 இலட்சம் பங்குத் தொகையினையும், ஆறாயிரம் உறுப்பினர்களையும் கொண்ட ஐந்து மாவட்டச் சம்மேளனங்கள் 1. கன்னியாகுமரி, 2. திருநெல்வேலி 3. இராமநாதபுரம், மதுரை, 4. கோவை-பெரியார், 5. சேலம்-தருமபுரி மாவட்டங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இச்சங்கங்களை ஒருங்கிணைத்து வியாபாரம், திட்டச் செயலாக்கம், ஆராய்ச்சி போன்ற பணிகளைச் செய்ய மாநில அளவில் தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் என்ற பேரமைப்பு 21-10-57-இல் பதிவு செய்யப்பட்டு 16-1-58-இல் செயல்படத் துவங்கியது. இந்த இணையத்தில் தற்போது ரூ.32.00 இலட்சம் பங்குத்தொகையினைச் செலுத்தி 2780 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

மாநில இணையம் உள்நாட்டு வியாபாரம், ஏற்றுமதி வாணிபம் ஆகியவற்றைச் சிறப்பாகச்செய்து இந்தியாவில் வழிகாட்டும் அமைப்பாகமுதன்மைஇடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. உறுப்பினர்களாக இணைந்துள்ள சங்கங்கள் மற்றும் பனைத் தொழிலாளர்களின் தொழில்மேம்பாட்டுக்கும், தொழில்நுட்ப வளர்ச்சிக்கும், வர்த்தக விரிவாக்கத்துக்கு இணையம் உதவுகிறது. தேவைக்கு ஏற்றவாறு திட்டங்களை வகுத்து தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமும், தமிழக அரசிடமும் நிதியுதவிகளைப் பெற்றுத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

பனை மரங்களும், பனைத் தொழிலாளர்களும் அதிகமாக உள்ள இடங்களில் பனைப்பொருள் உற்பத்தி மையங்களை அமைத்து சுயவேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. கிராம அளவில் பயிற்சி நிலையங்களை அமைத்து. புதிய தொழில்நுட்ப அடிப்படையில் பனை ஓலை, பனை நார், பனங் கற்கண்டு முதலிய பனைப் பொருள் உற்பத்தியில் பயிற்சி அளிக்கப்படுகிறது. கடலூரில் மண்டலப் பொருள் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டு தென் மாநிலங்களைச் சேர்ந்த பனைத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாநில இணையம் கதர் வாரிய இணை இயககுநர் - சிறப்பு அலுவலரின் கீழ் செயல்படுகிறது. மேலும் கதர் வாரிய ஐந்து உதவி இயக்குநர்கள், முதுநிலைக் கணக்கு அதிகாரி மற்றும் கண்காணிப்பாளர்கள் சிறப்பு அலுவலரின் நிர்வாகம் மற்றும் வர்த்தகப் பணிகளுக்கு உதவுகின்றனர். இவர்களைத் தவிர 122 நிரந்தர இணையப் பணியாளர்களும் உள்ளனர்.

**ஏற்றுமதி**

மாநில இணையம் ஏற்றுமதி வாணிபத்தில் 1965-66-இல் ஈடுபட்டு ரூ. 11.73 இலட்சம் மதிப்புள்ள பனந்தும்பை ஏற்றுமதி செய்தது. 1987-88-இல் ரூ. 113.68 இலட்சம் மதிப்புள்ள பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டது.

**பனஞ்சீனி ஆலைகள்**

மக்களின்உணவுப்பழக்கவழக்கங்களில் வேகமாக ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு பனை வெல்லத்திலிருந்தும், பதநீரிலிருந்தும் சீனியை உற்பத்தி செய்ய சென்னை - மாதவரம், தருமபுரி மாவட்டத்தில் மத்தூர், கோவை-பெரியார் மாவட்டத்தில் குன்னத்தூர் ஆகிய இடங்களில் சிறிய பனஞ்சீனி ஆலைகள் நிறுவப்பட்டுள்ளன. இவை உற்பத்தி செய்யும் பனஞ்சீனியைப் பயனபடுத்தி சாக்லேட், மிட்டாய் வகைகள், ஜாம், பாம் கோலா, பாம்டா பானங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**பதநீர் விற்பனை**


பதநீர் பருவ காலங்களில் பனை மரங்களிலிருந்து சேகரிக்கப்படும் சுவையும், ஊட்டச் சத்துக்களும், நிறைந்த இயற்கை பானமாகும், பல், எலும்புகளின் வளர்ச்சிக்கும், தேக ஆரோக்கியத்துக்கும் சிறந்த இப்பானத்தை நகர மக்களுக்கு எளிதாகக் கிடைக்கும் வகையில் பாலிதீன் உறைகளில் நிரப்பி கடைகள் மூலம் விற்பனை செய்கிறார்கள்.

**ஆராய்ச்சி**

பனை நுங்கைப் பதப்படுத்தி டின்களில் அடைத்து விற்பனை செய்யும்முறை கண்டுபிடிக்கப்பட்டு குறைந்த அளவில் உற்பத்தி செய்யப்

படுகிறது. பதநீரைக் காய்ச்சுதல், கற்கண்டு உற்பத்தி ஆகியவைகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு புதிய தொழில் நுட்பங்கள் புகுத் தப்பட்டுள்ளன.

பனை மரங்களைக் குட்டையாக வளரச் செய்தல், ஆண்டு முழுவதும் கூடுதல் இனிப்புச் சத்துள்ள பதநீரைச் சுரக்கச் செய்தல், பனங் கன்றுகளை நாற்றாக வளர்த்து இடம் பெயர்த்து நடுதல் ஆகியவற்றை ஆராய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஸ்ரீவில்லிபுத்தூரில் பனைமர ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை நிறுவியுள்ளது. கதர் ஆணைக்குழு பனைத் தொழில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றினைத் திருநெல்வேலியில் நிறுவ உத்தேசித்துள்ளது.



பனை மரத்தினைத் தமிழக அரசு மாநில மரமாக அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் 5.19 கோடி பனை மரங்கள் உள்ளன. பனைமரங்கள் மூலம் 5.68 இலட்சம் கிராம மக்கள் சுயவேலைவாய்ப்பினைப் பெறுகின்றனர். பனைமரத்தின் எல்லா உறுப்புகளும் பொருளாதார ரீதியாகப் பயன்படுகின்றன. குறைந்த முதலீட்டில் பனைத் தொழிலைச் செய்ய முடிவதால் ஏழைகளின் நண்பனாகப் பனை மரம் விளங்குகின்றது. ஒரு பனை மரம் ஒரு பருவ காலத்தில் 180 லிட்டர் பதநீரைத் தருகிறது. இதிலிருந்து சுமார் 20 கிலோ பனை வெல்லத்தைத் தயாரிக்கிறார்கள். பெண் பனைகள் குளுமையும் இனிமையும் நிறைந்த பனை நுங்கைத் தருகின்றன. பனங்கிழங்குகள் ஏழைகளின் சத்துணவாகும். பனை மரங்கள் உண்ண உணவும், வீடு அமைக்க ஓலை மற்றும் சட்டங்களும் தருவதோடு கிராமத்தொழில்களுக்குரிய ஓலை, நார், தும்பு, மட்டை முதலிய மூலப் பொருட்களையும் வழங்குகின்றன. இவற்றை மேலை நாட்டவர் அற்புத மரமென்று பாராட்டியிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.



**வழிகாட்டும் தமிழகம்**

தமிழ்நாடு பனைத் தொழில் வளர்ச்சியில் இந்தியாவில் முதலிடம் வகிக்கிறது. இந்தியாவின் மொத்தப் பனைப் பொருள் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 77 சதவிகிதமாகும். வேலைவாய்ப்பில் 79 சதவிகிதம் தமிழகத்தின பங்காகும். 1987-88-இல் தமிழகம் முழுவதும் ரூ. 60.08 கோடி மதிப்புள்ள பனைப் பொருட்கள் உறபத்தி செய்யப்பட்டு, ரூ. 67.42 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டன. இதில் பனை வெல்லத்தின் உற்பத்தி மதிப்பு மட்டும் ரூ. 45.69 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இந்திய அளவில் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு திட்டப் பணிகளுக்காகத் தமிழகத்துக்கு அதிக நிதியினை ஒதுக்கிக் கொடுக்கிறது. 1988-89-ஆம் ஆண்டுக்கு கதர் ஆணைக்குழு ரூ. 16.89 இலட்சம் மானியமாகவும், ரூ. 36.59 இலட்சம் கடனாகவும் ஒதுக்கியுள்ளது. இது மட்டுமின்றி ரூ. 81.00 லட்சம் வங்கிக் கடனாகவும் அனுமதித்துள்ளது. ஆக மொத்தம் ரூ. 134.48 லட்சம் திட்ட நிதியாக அனுமதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதிக அளவில் பனை மரங்களைப் பயன்படுத்திக் கிராமிய சுயவேலைவாய்ப்பினை உருவாக்கவும், உற்பத்தியைப் பெருக்கவும், தொழில்நுட்பங்களை மேம்படுத்தவும், இருக்கின்ற வசதிவாய்ப்புக்களைப் பயன்படுத்தித் தொடர்ந்து செயல்பட்டு இந்தியாவில் முன்னணி மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. ●



# அருநூத்து மலை மலைவாழ் மக்களுக்கு...

அருநூத்துமலை மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 28-2-78-ந் தேதி பதிவாகி, 23-3-78-ஆம் தேதி வேலை செய்யத் தொடங்கியது. இதன் விவகார எல்லையில் 21 கிராமங்கள் உள்ளன. இப்பகுதியில் வசிப்பவர்களின் தொழில் விவசாயமும், விவசாயத்தைச் சார்ந்த தொழில்களும் ஆகும்.

அருநூத்துமலை மலைவாழ் மக்கள் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமானது மலைவாழ் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக உற்பத்திப் பெருக்கத்திற்கு கடன் வழங்கி, பொருள்களை விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்து, வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் பணியாற்றி வருகிறது.

சங்கம் மலைவாழ் மக்களுக்கு விவசாய உற்பத்திக்கு வட்டி இல்லா கடனும், மலைவாழ் மக்கள் அல்லாதவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடனும் வழங்கி வருகிறது ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மலைவாழ் மக்களுக்கு மேச்சேரி இன ஆடுகள் 21 வாங்க ரூ. 6,000-ம், இரண்டு பால்மாடுகள் வாங்க 6000-ம், இரு எருதுகள் வாங்க ரூ. 4000-ம் வழங்கி வருகிறது. இத்தொகையில் பாதி அரசு மானியமாக வழங்கியுள்ளது. மீதிப் பாதி கடன்களுக்கு வட்டியில்லை. மலைவாழ் மக்களுக்கும் ஏனையவருக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பட்டி ஆடு, பால்மாடு, உழவுமாடு வாங்கவும் சிறு தொழில்கள் செய்யவும் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இக்கடன்களிலும் மலைவாழ் மக்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு வட்டியில்லை. மேலும் மலைவாழ் மக்களுக்கு பண்டிகை, உடல்நலக் குறைவு, சடங்கு போன்ற திடீர் செலவினங்களுக்காக ரூ. 500 வரை நுகர் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சங்கப் பகுதியிலும் சமவெளிப் பகுதி போன்றே சோளம், கம்பு, ராகி, தினை, பருத்தி, குச்சிக் கிழங்கு போன்ற மானாவாரிப் பயிர்களே அதிகமாக பயிரிடப்படுகின்றன. சிற்சில இடங்களில் மட்டுமே தண்ணீர் மூலமான கரும்பு, வாழை போன்ற பயிர்கள் விளைகின்றன. இங்கு விளையும் பொருட்களில் பெரும்பகுதி இங்குள்ளவர்களே பயன்படுத்துகின்றனர். மொச்சை (பீன்ஸ்) இங்குள்ளவர்களின் தேவைக்கு அதிகமாக விளைச்சல் செய்கிறார்கள், இதனைச் சங்கம் கொள்முதல் செய்து கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் விற்பனை செய்து வருகிறது.

அருநூத்துமலையில் சிறுவனப் பொருளாகத் திகழ்வது புளி ஒன்றே, இப்பகுதியில் குதிமடுவு, புங்கமடுவு மற்றும் மிதிக்குட்டை காப்புக் காடுகள் மற்றும் விளாம்பட்டி குறிச்சி மற்றும் பெலாப்பாடி காப்புக் காடுகள் உள்ளன.

இக்காடுகளை வனத் துறை குறைந்த குத்தகைக்குச் சங்கத்திற்கு ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இதில் சுமார் ரூ. 30,000 புளி மகசூல் உள்ளது. இதனால் சுமார் 500 பேருக்கு வேலைவாய்ப்பினை அளிக்க முடிகிறது.

ஏனைய மலைப்பகுதியில் உள்ளவர்கள் போல் அருநூத்துமலையில் வாழும் பழங்குடியினர் இன்றும் நாகரிகம் படைத்தவர்களாக இல்லை. மேலும் இப்பகுதியில் வேறு மக்கள் ஊடுருவதும் குறைவாகவே உள்ளது. பெரும்பகுதி நிலம் மூதாதையர்கள் பெற்றதாகவே உள்ளது.

அருநூத்து மலைப்பகுதி மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்கள் வழங்க 17 கிராம அங்காடிகள் இயங்குகின்றன. இங்கு மானிய விலையில் அரிசி 1 கிலோ ரூ. 1.40 எனவும், கோதுமை 1 கிலோ 1.50 எனவும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இதர பண்டங்களை மொத்த விற்பனை கூட்டுறவுப் பண்டகசாலையிலும், இதர கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக் குறைந்த இலாபத்தில் விற்பனை செய்து வருகிறது. சங்கம் இக்கடைகளை நடத்துவதற்கான செலவுகளை மானியமாகப் பெறுவதன் மூலமும், ஆதாயமற்ற வகையில் வியாபாரம் செய்வதன் மூலமும் மக்களுக்குச் சகாய விலையில் பண்டங்கள் வழங்கிச் சேவை செய்கிறது.

அருநூத்துமலை மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேற்கூறியவாறு இயங்கி பணிபுரிய கூட்டுறவுத் துறையினரும் சேலம் மத்திய கூட்டுறவு வங்கியினரும் தமிழக அரசின் தோட்டக்கலைத்துறை, கால்நடைத் துறை, வனத்துறை ஆகிய துறையினரும் பெரிதும் ஒத்துழைப்பு நல்கி சங்க வளர்ச்சிக்கும் இப்பகுதி மக்கள் மேம்பாட்டினுக்கும் உறுதுணையாக உள்ளனர்.



"என் பம்ப் செட்டை
இன்ஷூர் செய்ய நான்
மிகச் சிறிய தொகை
செலுத்தினேன்."

# "அது கெட்டுபோன போது வேறொன்றை வாங்க யுனைடெட் இந்தியா உதவியது-விரைவாக!"

உங்கள் பகுதியில் உள்ள யுனைடெட் இந்தியா அலுவலகத்தையோ ஏஜன்டையோ அணுகுங்கள். ஒரு பம்ப் செட் இன்ஷூரன்ஸ் பாலிசி எடுப்பது எவ்வளவு சுலபம் என்பதையும் எவ்வளவு செலவு குறைவு என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.
தீயினாலோ மின்னலினாலோ, இயந்திர அல்லது மின்சார கோளாறினாலோ

உங்கள் பம்ப் செட் கெட்டுப்போனல் அல்லது திருடு போனல் உங்கள் இழப்பிற்கு யுனைடெட் இந்தியா ஈடு செய்யும் — விரைவாக. உங்கள் குடும்பத்தின் நல்வாழ்வையோ அல்லது உங்களது நல் வாழ்வையோ விதியிடம் விட்டு விடாதீர்கள். உடனே யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் பாலிசி எடுத்துக் கொள்ளுங்கள்; முழு பாதுகாப்பு பெறுங்கள்.

UNITED INDIA

யுனைடெட் இந்தியா விவசாய பம்ப்செட் இன்ஷூரன்ஸ் பாலிசி

**யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.**

*(ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)*

**தலைமை அலுவலகம்: 24 ஒயிட்ஸ் ரோடு, சென்னை - 600 014.**

இன்றே எங்களது 1000' க்கும் மேற்பட்ட அலுவலகங்களில் ஏதாவது ஒன்றுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

स्वतंत्रता के चालीस वर्ष
FORTY YEARS OF FREEDOM

HTA 7027




# பனைத் தொழிலில் பயன்மிகு மறுமலர்ச்சி

பனைத்தொழில் பழமைமிக்க கிராமத்தொழில்களுள் ஒன்றாகும். இத்தொழில் மூலம் அதிகமான ஏழை எளிய கிராம மக்கள் சுய வேலைவாய்ப்பினைப் பெறுகின்றனர். இத்தொழிலைச் சார்ந்து தச்சர், கொல்லர், சுண்ணாம்புத் தொழிலாளர்கள், தோல் தொழிலாளர்கள் போன்ற கைவினைஞர்களும் ஓரளவுக்கு சுயவேலைவாய்ப்பினைப் பெறுவதால், இத்தொழில் கிராமத்தொழில்களில் அச்சாணியாகத் திகழ்கிறது.

பண்டைக்கால மக்கள் சுண்ணாம்புடன் பனைவெல்லத்தையும் சேர்த்து அரைத்து, அரண்மனைகள், கோபுரங்கள், பாலங்கள், அணைகள் முதலியவற்றைக் கட்டினர். பனைமரம் மனிதனின் அன்றாட வாழ்வுக்குத் தேவையான பொருட்களைத் தருகின்றன. இதனைக் 'கற்பகத்தரு' எனக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி, சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன், இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், மதுரை, அண்ணா, திருச்சி, சேலம், தருமபுரி, கோவை, பெரியார் ஆகிய மாவட்டங்களில் சிறப்பாகப் பனைத்தொழில் நடைபெறுகிறது.

சிதம்பரனார் மாவட்டத்தில் ஒரு கோடி பனைகளும், நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் 68 லட்சம் பனைகளும் உள்ளன. இவ்விரு மாவட்டங்களையும் ஆங்கிலேயர் 'பனைமர மாவட்டம்' என்று குறிப்பிட்டனர். இம்மாவட்டத்தில் பனைகளை முழுமையாகப் பயன்படுத்திப் பல்வேறு வகையான சிறப்புமிக்க பனைப்பொருட்கள் உற்பத்தி செய்கின்றனர். வேம்பார், உடன்குடி, திசையன்விளை ஆகிய இடங்களில் உற்பத்தியாகும் பனைவெல்லத்திற்குத் தனி மதிப்பு உள்ளது. கோவை- பெரியார் மாவட்டங்கள் பனை மற்றும் தென்னை வெல்ல உற்பத்தியில் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தின் கடலோரப் பகுதிகள், சிதம்பரனார் மாவட்டத்தில் சாத்தான்குளம் பகுதி ஆகியவை பனை ஓலைப் பாய் உற்பத்தியில் சிறந்து விளங்குகின்றன. வணிக ரீதியாகப் பனங்கற்கண்டினை உற்பத்தி செய்வதில் திருச்செந்தூர் வட்டம் இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளது.

இவ்வளவு சிறப்புமிக்க பனைத் தொழில், தற்கால அறிவு வளர்ச்சிக்கும், விஞ்ஞான மறுமலர்ச்சிக்கும் ஈடுகொடுக்கும் அளவுக்குத் தொழில்நுட்ப மறுமலர்ச்சி போதுமான அளவில் ஏற்படவில்லை. இன்னும் பழைய முறைகளிலேயே பதநீரை இறக்கிக்காய்ச்சுகின்றனர். பனைமலை மற்றும் நார்ப்பொருட்களை அன்றாடம் நிகழும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு புதுமையான வடிவமைத்துப்புத்தம் புதிய வகைப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையினை எட்ட இயலவில்லை. இதற்குத் தொடர்ச்சியான ஆராய்ச்சி, பயிற்சி அவசியம். ஆங்காங்கே தொழில்நுட்பப் பயிற்சி முகாம்கள் கூடிக் கலந்துரையாடுதல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம், உற்பத்தியாளர்களை நெருங்கிவரச் செய்ய வேண்டியுள்ளது. மேலும் தொடாச்சியான ஆராய்ச்சிகளை முழுமையான வசதிகளைக் கொண்ட அமைப்புக்கள் மேற்கொள்ளலாம்.

**மரம் ஏறுதல்**

தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் வடக்கயிற்றைப் பயன்படுத்தியும், தென்மாவட்டங்களில் கையைக் கோர்த்து மரங்களைப் பிடித்துத் தொற்றிக் கொண்டும், மரம் ஏறுகின்றனர். பதநீரைச் சேகரிக்கத் தினம் இரண்டு வேளை மரம் ஏறுகின்றனர். ஒருவர் தினம் 30 முதல் 40 மரங்களில் ஏறி, 60 முதல் 100 லிட்டர் பதநீரைச் சேகரித்து, சராசரியாக 8 முதல் 10 கிலோ பனைவெல்லத்தைத் தயாரிக்கிறார். சராசரியாக ஒருவரின் ஆண்டு பனைவெல்ல உற்பத்தி முக்கால் அல்லது ஒரு டன் ஆகும். மரம் ஏறுவதில் தனி நபரின் ஆற்றல் அந்நபரின் உடல்வளம், வயது ஆகியவற்றைச் சார்ந்திருப்பதால் அவர் தளர்ச்சியடையும்போது உற்பத்தி அளவு குறைகிறது. இதனால் குறைந்த மனித உழைப்பில் மரத்தின் மீது ஏறி இறங்குவதற்கு எளிய மலிவான கருவிகளை உருவாக்குவது தலையாயதாகும். மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையம் சமஎடை முறையிலும் (Central Weight Balance), ஏணி மூலமும் மரங்களில் ஏறுவதற்கான உபகரணங்களை உருவாக்கிப் பரிசீலித்து வருகிறது. இளைய தலைமுறையினரைக் கவர்கின்ற வகையில் மரம் ஏறுவதற்குரிய கருவியை உருவாக்க வேண்டியதுள்ளது.

**பதநீரைக் காய்ச்சுதல்**

மரங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட பதநீர் இறக்கிய நான்கு மணி நேரத்துக்குள் கெடத் தொடங்குவதால், குறிப்பிட்ட நேரத்துக்குள் காய்ச்சிப் பனைவெல்லமாக ஆக்க வேண்டும். இதனை நீண்ட நேரம் கெடாமல் பாதுகாப்பது அவசியமாக உள்ளது. அவ்வாறு பாதுகாத்

தால், நிதானமாகக் காய்ச்சித் தரமான பனைவெல்லத்தை உற்பத்தி செய்யலாம். உச்ச பருவத்தில் (Peak Season) அதிகமான அளவு பதநீர் கிடைக்கும்போது நான்கு மணிநேரத்துக்குள் காய்ச்சாவிட்டால், பதநீர் வீணாகி விடுமே என்ற கவலையும் ஏற்படாது.

பொதுவாகப் புராதன அடுப்புகளில் தாழிப்பானைகளில்பதநீரைக் காய்ச்சுவது வழக்கமாக உள்ளது. நூறு கிலோ பதநீரைக் காய்ச்ச நூறு கிலோ விறகு செலவாகிறது. இதனால் பனைவெல்லத்தின் உற்பத்தி விலையும் அதிகமாகிறது. பதநீர் பாகாகி வரும்போது கரிந்து விடுவதாலும், புகைபடிவதாலும் பனைவெல்லத்தின் தரமும் குறைகிறது. இக்குறையைப் போக்க வட்டம் மற்றும் நீண்ட சதுர இரும்புக் கொப்பரைகளும், புகை போக்கியுடன்கூடிய நவீன அடுப்புக்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இம்முறையால் விறகுச் செலவும், காய்ச்சும் நேரமும் கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளன

**பனை வெல்லம்**

நூறு கிலோ பதநீரில் 12 கிலோ பனைவெல்லத்தையே உற்பத்தி செய்ய முடியும். பதநீரிலுள்ள சுண்ணாம்புக் காரத்தை நடுநிலையாக்கி, காய்ச்சும் முறையால் தரமான பனைவெல்லத்தை உற்பத்தி செய்யலாம். பாகின் பருவம் தவறிவிடாமல் சரியானபடி பாதுகாப்பதற்கு தெர்மாமீட்டரை உபயோகிக்கும் முறையும் புகுத்தப்பட்டுள்ளது.

**பலங்கற்கண்டு**


பனங்கற்கண்டு படிகங்களுடன் விரைவில் விளைவதற்காகப் படிகத் தொட்டிகள் (Candy Crystalisers) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 100 கிலோ பதநீரில் 5 கிலோ பனங்கற்கண்டை உற்பத்தி செய்யலாம். பனங்கற்கண்டைச் சுகாதார முறையிலும், நவீன தொழில் நுட்பங்களைப் பின்பற்றியும் உற்பத்தி செய்வதை விரிவான அளவில் பரப்ப வேண்டியுள்ளது.

**பனைவெல்லத்தைச் சேமித்தல்**

பனைவெல்லத்தைப் பருமனாகவும், சிறியதாகவும், பலகன அளவுகளில் உற்பத்தி செய்கின்றனர். இதில் உள்ஈரம் இருப்பதாலும், காற்றிலுள்ள ஈரத்தை உறிஞ்சும் தன்மை உள்ளதாலும், விரைவில் கசிந்து விடுகின்றன. எனவே வெதுவெதுப்பான, காற்றுள்ள, சமையல் அறைகளிலுள்ள பரண்களில் இதனைச் சேமித்து வைக்கும் பழக்கம் உள்ளது. தற்போது பனை வெல்லச் சேமிப்புக் கிட்டங்கிகளில் காற்றிலுள்ள ஈரத்தை உறிஞ்சும் கருவிகள் பொருத்தப்படுகின்றன.

**பனைவெல்ல அச்சுக்கள்**

தமிழ்நாட்டில் பல்வேறு பருமனிலும், வடிவத்திலும் பனை, தென்னை



மற்றும் அச்சு வெல்லத்தை உற்பத்தி செய்கின்றனர். இதற்கு தென்னஞ்சிரட்டைகளை அச்சுகளாகப் பயன்படுத்துகின்றனர். தற்போது ஒரே சீரான வடிவத்தில் இதனை உற்பத்தி செய்ய மர அச்சுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**பனைஓலைப் பொருட்கள்**

பனைஓலையினால் கொட்டான்கள், மிட்டாய்ப் பெட்டிகள், பாய்கள் செய்யப்படுகின்றன. ஆலயங்கள் உள்ள பகுதிகளிலும், சில முக்கியச் சுற்றுலா மையங்கள் அமைந்துள்ள இடங்களிலும் நாகரிக மக்கள் விரும்பும் பனை ஓலைப் பொருட்கள் உற்பத்தியாகின்றன.

தற்போது ஏற்றுமதி வாய்ப்பு உள்ளதால் வெளிநாட்டினர் விரும்பும் வடிவமைப்புடன் பனைஓலைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் பழவேற்காடு, சிதம்பரனார் மாவட்டத்தில் மணப்பாடு, மெஞ்ஞானபுரம், குலசேகரன் பட்டினம், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புல்லாணி ஆகிய இடங்களில் பகட்டானபனைஓலைப் பொருட்கள் உற்பத்தியாகின்றன. தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகூரில் மடக்கு



விசிறிகள் சிறப்பான முறையில் தயாரிக்கப்படுகின்றன.

பனைஓலைகளைப் புராதன முறையில் சிறிய பட்டைகளாகக் கிழிப்பதில் சிரமமும், காலவிரையமும், ஏற்படுவதைத் தவிர்க்க ஓலை வாரும் கருவி (Sizing Tool) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**பனைநார்ப் பொருட்கள்**

புராதனமுறையில் பனைநாரினால் அரிசிப் பெட்டி பின்னுதல், கட்டில்கள் பின்னுதல் போன்ற தொழிலை ஏழை எளியவர்கள் செய்கின்றனர். பனைநாரினால் கூடைகள், பெட்டிகள் போன்றவைகளை உற்பத்தி செய்யும் முறை தற்காலத்தில் பின்பற்றப்படுகிறது.

**பனந்தும்பு**

பனந்தும்பு ஓர் ஏற்றுமதிப் பொருள். பனம்பத்தல்களைக் கையால் அடித்துச் சேகரிப்பதற்கு கடினமான உடலுழைப்பு தேவைப்படுகிறது. தற்போது பத்தல் நசுக்கும் கருவி (Pathal Crusher) மற்றும் தும்பைச் சீவும் கருவி (Spike Machine) ஆகியவை வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

பனைத்தொழிலைவிஞ்ஞான ரீதியாகத் திருத்தியமைத்தால் கிராமப் பொருளாதார மறுமலர்ச்சிக்கு வழி பிறக்கும். ஏழை எளியவர்களுக்குச் சுயவேலைவாய்ப்பும் கிடைக்கும். பரம்பரைத் தொழிலாளர்கள் நம்பிக்கையுடன் பனைத்தொழிலைச் செய்வார்கள். இத்தொழில் மதிப்புமிக்க தொழிலாகவும் மாறும். நலிந்தோர்க்கு நல்லாதரவு தருவது பனைத்தொழில் வறட்சிப் பகுதிகளில் வாழ்வோருக்கு ஏற்ற தொழில்.

# நகர மக்களின் குடும்ப வங்கி

ஆர். வேலு,
தனி அலுவலர், சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி.

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி 1930-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு சென்னை நகர்வாழ மக்களுக்கு உற்ற துணையாகக் கடந்த 58 ஆண்டுகளாகப் பணி புரிந்து வருகிறது.

நகரில் வங்கி சேவை இல்லாத பகுதிகளிலும், கிளை திறந்த பெருமை இவ்வங்கிக்கு உண்டு. சென்னை நகரில் எம். சி. சி. வங்கி பெரிய ஆலமரம் போன்று வளர்ந்து, இன்று 45 கிளைகளுடனும், 3 விரிவாக்கக் கிளைகளுடனும் வாடிக்கையாளருக்குச் சேவை செய்து வருகிறது.

வங்கியின் சூளைமேடு கிளையில் சேமிப்புக் கணக்கில் துரித சேவைப் பிரிவு (டெல்லர் சிஸ்டம்) ஒன்று துவக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. அனைத்திந்திய அளவில் புகழ் ஈட்டும் வகையில், தென்னகத்தின் கன்னி முயற்சியாய் நடமாடும் கிளை ஒன்றினை இவ்வங்கி சிறப்பாக நடத்தி வருகிறது. வங்கிகளின் சேவைக் கரம் நீள முடியாத மூலை முடுக்குகளில் நடமாடும் கிளைகள் சேவை செய்து வருவதை நகர மக்கள் நன்கு அறிவார்கள். நடமாடும் கிளை தற்பொழுது பிருந்தாவன் நகர், கொளத்தூர் பகுதிகளில் செயல்பட்டு வருகிறது. வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 கோடியும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 6.4 கோடியுமாகும்.

எல்லாப் பிரிவு மக்களுக்கும் ஏற்ற வகையில் பலதரப்பட்ட வைப்புத் திட்டங்களைக் கொண்டது எம்.சி.சி. வங்கி. தற்பொழுது வங்கியின் மொத்த டெபாசிட் ரூ. 9447.63 இலட்சமாகும். மற்ற வங்கிகளைவிட அதிக வட்டி தருகிறது எம்.சி.சி. வங்கி. பலவித வைப்புத் திட்டங்களில் குழந்தைகள், சேமிப்புத் திட்டம் அனைவரையும் கவர்ந்த ஒரு திட்டமாகும். வங்கியில் கலைமகள், முத்தாரம், செல்வக் களஞ்சியம், கற்பகம் (ஓய்வுக்காலப் பென்ஷன் திட்டம்) போன்று பலவிதச் சேமிப்பு வைப்புத் திட்டங்கள் உள்ளன.

சென்னை நகரில் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேவையான கடனுதவி செய்து வரும் ஒரே வங்கி எம்.சி.சி. வங்கியாகும். கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கும், சிந்தாமணி போன்ற கூட்டுறவுப் பண்டகசாலை நிறுவனங்களுக்கும் மற்றும் ஏராளமான தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பணியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பெருமளவில் எம். சி. சி. வங்கி நிதியுதவி செய்து வளர்ந்து வருகின்றது. இது மட்டுமில்லாது பொதுமக்களுக்கு நுகர்வோர் கடன், நகைக்கடன் குறைந்த வட்டியில் சிறு தொழில் கடன் போன்ற பல்வேறு கடன் உதவிகளைத் தந்து மக்கள் மத்தியில் பிரபலமாக உள்ள வங்கி எம். சி. சி. வங்கி.

நகைக் கடன் என்றால் அநியாய வட்டியை ஆரம்பத்திலேயே பிடிக்கும் அடமானக் கடைகள்தான் முன்பு நினைவிலே வரும். இன்றைய சூழ்நிலையில் குறைந்த 16 சதம் வட்டியில் நகைக் கடனை வாரி வழங்கும் வங்கி எம்.சி.சி. வங்கி. சவரன் ஒன்றுக்கு ரூ. 1500 வீதம் அதிகப்பட்சம் ரூ. 10,000 வரை ஒரு நபருக்குக் கடன் வழங்கப்படுகிறது. இதுவரை வழங்கிய நகைக் கடனில் ரூ. 31.88 கோடி நிலுவையாக உள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் பொது விநியோகத்திற்கு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எம். சி. சி. வங்கி இந்த ஆண்டு ரூ. 380.25 இலட்சம் உதவி அளித்துள்ளது. தாழ்த்தப்பட்டவர் மற்றும் மீனவர்களுக்குக் கடந்த ஆண்டு ரூ. 3.19 இலட்சம் வங்கி கடன் கொடுத்துள்ளது. மற்ற சங்கங்களைவிட இதற்கு $\frac{1}{2}$ சதவீத வட்டி குறைத்தே வசூல் செய்யப்படுகிறது. மேலும் சலுகையாகக் கடன் தவணையை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் சங்கத்தினருக்கு $1\frac{1}{2}$ சதம் வட்டி தள்ளுபடி செய்யப்படுகிறது.

நெசவாளர் குடும்பங்கள் பயன் பெற 7.5 சதவீதக் குறைந்த வட்டியில் ரூ. 40.40 இலட்சம் வரை வங்கி கடனுதவி செய்துள்ளது.

தற்பொழுது சொந்தமாகத் தொழில் துவங்கி வாழ்க்கையில் முன்னேற நினைக்கும் தொழில் முனைவோர்க்கு வங்கியில் சிறு தொழில் கடன் (SSI Loan) கொடுக்கப்பட்டு வருகிறது. சிறு தொழில் கடனுக்கு 10 சதவீதம் முதல் 12.5 சதவீதம் வரை வட்டி வசூல் செய்யப்படுகிறது. அதிகப் பட்சக் கடன் தொகை ரூ. 5,00,000 ஆகும். இதுவரை 56 கடன்தாரர்களுக்கு ரூ. 27.31 இலட்சம்வரை கடனாகக் கொடுக்கப்பட்டு உள்ளது. மேலும், டாக்டர்களுக்கு நவீன மருந்து வகைகள் வாங்குவதற்கும், மருத்துவமனைக்கு வேண்டிய தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கும் 14 சதவீதவட்டியில் கடன் வழங்கிவருகிறது. மக்கள் போக்குவரத்து மற்றும் பொருள் போக்குவரத்து வாகனங்கள் வாங்குவதற்கும் 14 சதவீத வட்டியில் ரூ. 5 லட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது.

தவிர, சென்னை நகரில் உள்ள அனைத்துப் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் எங்களது வங்கி கடன் வழங்கி வருகிறது. இதுவரை வழங்கப்பட்ட கடனில் ரூ. 3685.91 இலட்சம் நிலுவையாக உள்ளது.

தொலைக்காட்சி, ஃபிரிட்ஜ், மிக்ஸி போன்ற வீட்டு உபயோகத்திற்குத்தேவையான பொருள்களை அனைத்து மக்களும் பெற்று மகிழ்ந்திட ரூ. 10,000 வரை கடன் வழங்கப்படுகிறது. இவ்வகைக் கடனில் இதுவரை ரூ. 47.65 இலட்சம் நிலுவையாக உள்ளது.


கூட்டுறவுத் துறையில் புதிய முயற்சியால் முற்றிலும் பெண்களால் நிர்வகிக்கப்படும் வங்கியின் கிளையொன்று திருவல்லிக்கேணிப் பகுதியில் 10-2-86-ந் தேதி திறக்கப்பட்டு நன்கு செயல்பட்டு வருகிறது.

எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு 1987-88-ஆம் ஆண்டுக்கு ரூ. 269.43 இலட்சம் இலாபம் அடைந்துள்ளது. அதுமட்டும் இல்லாது 1950ஆம்ஆண்டு முதல்தணிக்கையில் 'ஏ' பிரிவில் தொடர்ந்து வங்கி வகைப்படுத்தப்பட்டுள்ளது, வங்கியின் நல்ல இயக்கத்திற்கு ஒரு சான்றாக விளங்குகிறது.

தமிழ்நாட்டில் மத்திய வங்கி வரலாற்றிலேயே தொடர்ந்து 4 ஆண்டுகளாக 15 சதம் டிவிடெண்ட் தரும் வங்கி இது ஒன்றேயாகும். தமிழகத்தில் கடன் வசூலில் முழுத்திறமை காட்டி முன்னணியில் உள்ள வங்கி எம். சி. சி. வங்கி. கூட்டுறவாளர்களும், நடுத்தர மக்களும் பயன் பெற, நிறைந்த வசதிகளுடன் சென்னை பிராட்வே பகுதியில் (வங்கியின் தலைமையகத்தின் அருகில்) கூட்டுறவுத் திருமண மண்டபம் ஒன்றை இவ்வங்கி ரூ. 25 இலட்சம் செலவில் கட்டி, குறைந்த வாடகைக்குக் கொடுத்து வருவது, மக்கள் அனைவராலும் பாராட்டப்படும் நல்ல சேவையாகும்.

நகர மக்களின் வாழ்வோடும் வளமோடும் இரண்டறக் கலந்துவிட்டதால், எல்லோராலும் அன்புடன் எம். சி. சி. வங்கி என்று அழைக்கப்படுகின்ற வகையில், இவ்வங்கி நகர மக்களின் 'குடும்ப வங்கி'யாக நாளும் வெற்றிப்பாதையில் முன்னேறி வருகிறது.

# நூல்நயம்



### தமிழ் இதழியல் வரலாறு

ஆசிரியர்: மா.சு.சம்பந்தன்

வெளியீடு: தமிழர் பதிப்பகம்
243 லிங்கி செட்டித் தெரு
சென்னை-600001

பக்கம் 338 விலை ரூ.27

தமிழ் இதழ்கள் தோன்றிய நாள் முதல் இனறு வரை வெளிவந்துள்ள இதழ்களின் வரலாற்றை ஒருசேரத் தொகுத்து, திரு மா.சு.சம்பந்தன் அளித்துள்ள தமிழ் இதழியல் வரலாறு நூலை ஒரு கலைக் களஞ்சியம் என்று சொல்லலாம்.

தமிழ் இதழியல் பற்றிய சில நூல்கள் இதுவரை வந்துள்ளன அவை, சில பகுதியாகவும் மேலோட்டமான தகவல்களை உள்ளடக்கியவையாகவும் அமைந்திருந்தன. ஆனால் இந்நூல் விரிவான தகவல்களை நிரம்ப எடுத்துரைக்கிறது.

கி.பி. 1578இல் வெளியான 'தம்பிரான் வணக்கம்' எனும் கிறிஸ்தவ சமய வெளியீடுதான் தமிழில் முதலில் அச்சாகிய நூல். பின்பு ஆங்கில இதழ்களிலேயே 'தமிழ்' அறிக்கைகளாகவும் விளம்பரங்களாகவும் அச்சாகியது.

1802-இல் இலங்கையில் வெளியான சிலோன் கெஜட்டில் ஒரு பகுதி தமிழில் அச்சிடப்பட்டிருந்தது. சென்னையில் 1813-இல் 'தமிழ் மாகசீன்' ( Tamil Magazine ) என்ற பெயரில் சென்னை கிறிஸ்தவ சமயப்பரப்புக் கழகம் தமிழில் மாத இதழ் ஒன்றை வெளியிடத் தொடங்கிய பிறகு தமிழ் இதழியல் வரலாறு தொடங்குகிறது.

பத்துப் பகுதிகளில் தமிழ் இதழ்களின் வரலாற்றை விளக்கும் ஆசிரியரின் முயற்சியும் உழைப்பும் ஒவ்வொரு பக்கத்திலும் தெரிகிறது. தாம் ஓர் ஆராய்ச்சி அறிஞர் என்பதை இந்த நூல் மூலம் நிரூபித்துள்ளார் மா.சு.சம்பந்தன்.

பல்வகை இதழ்கள் என்று பன்னிரண்டு பிரிவுகளில் தமிழ் இதழ்களைப் பிரித்துப் பட்டியல் போட்டுக் காட்டியுள்ள ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது.

மொத்தத்தில் இந்த நூல் தமிழ் இதழியலில் ஒரு மகத்தான சாதனையாக விளங்குகிறது. ஆராய்ச்சி அறிஞர்களுக்கு மட்டும் பயன்படக்கூடிய நூல் மட்டுமல்ல இது. பொது அறிவை விரும்பும் அனைவரும் போற்றிப் பாதுகாக்கவேண்டிய நூலும் ஆகும்.

—மாமூலன்

### உயிர்ப் பொம்மை

ஆசிரியர்: டாக்டர் மனசை.ப.கீரன்
கமலவேணி பதிப்பகம்
'தணிகை' 135, சாந்திநகர்
குரோம்பேட்டை
சென்னை-600 044.

விலை ரூ.10 பக்கம்,128

மக்கள் தொகைப் பெருக்கம், அதன் விளைவுகள், குடும்பக்கட்டுப்பாடு ஆகியவற்றை வலியுறுத்தி எழுதப்பட்டிருக்கும் நாடகங்களின் தொகுப்பு.

எளிமையான முறையில் எழுதப்பட்டிருக்கும் நாடகங்கள் படிக்கவும் நடிக்கவும் பயன்படக்கூடியவை.

—அ.மருது




### மலைப்பூ

ஆசிரியர் : வலங்கொண்டான்

வெளியீடு: மணிமேகலைப் பதிப்பகம்,
72, திருவள்ளுவர் தெரு
திருவண்ணாமலை : 606 601.

விலை : ரூ. 3. பக் : 54,

இறை வழிபாட்டுடன் தொடங்கப் பெறுகின்றது, மலைப்பூவின் மணம். 'நிலம்' பற்றிக் குறிக்கும்போது இயற்கை வருணனைகளுடன், மயிலாடுதுறை - மாயவரம் ஆன மாயத்தையும், தகடூர் தருமபுரியானமையையும் 'புளியங்காடு' திண்டிவனமாவதையும் குறிப்பிடுகின்றார்.

ஆசிரியரின் மொழிப்பற்று, பல இடங்களில் புலப்படுகின்றது. கைம்பெண்கள் மறுமணத்தை வாழ்த்தி வரவேற்கும் நூலாசிரியர், உழைத்து சிக்கனமான வாழ்வில் வளம் பெற்றுச் சிறக்க வழிகாட்டுகிறார். ஏற்றத்தாழ்வின்றி அனைவர் குருதியையும் குடிக்கும் 'கொசு' முதலாளியின் பெருமைகள் நகைச்சுவையுடன் பேசப்படுகின்றன.

நாட்டில் நடமாடும் பல்வேறு திருட்டுகள் குறித்து ஆசிரியர் நயம்பட விளக்குகின்றார். கற்பனை நயமும் கருத்து வளமும் நிறைந்த கவிதைப் பூங்கா.

—டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி.

### கராத்தே கீதா

ஆசிரியர்: சிற்பி சோமு
வெளியீடு: சரவணா பிரசுரம்,
2497, தெற்கு ராஜவீதி
புதுக்கோட்டை-622 001.
விலை: ரூ.8.50 பக்கம்: 98

இந்நூலில் ஆறு நாடகங்கள் உள்ளன. எல்லாம் வானொலியில் ஒலிபரப்பானவை.

ஒரு பொய்' நாடகம், திருமண நெருக்கடியைச் சித்திரிக்கிறது; உமாவை மறப்பதா?' நாடகம், மருத்துவரின் கடமையை உணர்த்துகிறது; 'யாருக்கு வெற்றி?' நாடகம், கணவன் மனைவி பிரச்சினைகளைக் கூறுகிறது; 'கராத்தே கீதா' நாடகம் பெண்ணின் பெருமை பேசுகிறது. 'உண்மை சொன்னாள்' நாடகம், வரதட்சிணைக் கொடுமை ஒழிய வழி வகை கூறுகிறது.

இப்படி எல்லா நாடகங்களுமே படிக்க நன்றாக இருக்கின்றன

—பி.வி.கிரி

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

## சென்னை-600 005.

( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏறறுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $Sio_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2O$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $Sio_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3$ +94% |

தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்.
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN


தொழிற்சாலை

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

DIPR/1174/MS/88/ARIES

## இந்தியாவின் பல பாகங்களிலிருந்து நேர்த்தி மிக்க 50,000 பட்டுச்சேலைகள் ...

### இந்தியப்பட்டுகளுக்கான மிகப்பெரிய மையம் ...



# பட்டு மாளிகை

பட்டுச் சேலைகள் என்றால் யாருக்குத்தான் ஆசை வராது?

அதுவும் 50,000 பட்டுச்சேலைகள் ஒரே இடத்தில் இருந்தால் எப்படி இருக்கும்?

பலப்பல வண்ணங்கள்..பலப்பல ரகங்கள்..விரும்பி வாங்கிட விதவித மான சேலைகள்!

சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகைக்குச் செல்கிறோம்.

25,000 சதுர அடிப் பரப்பில் கீழ்த்தளம் மற்றும் நான்கு தளங்களில் பட்டுகளின் குவியல்! இந்தியாவிலேயே மிகப் பெரிய பட்டு மையமாக - பட்டு மயமாக விளங்கும் மாளிகை!

12-10-88 அன்று இந்தப் பட்டு மாளிகையை, தலைமைச்செயலாளர் திரு. எம். எம். இராஜேந்திரன், ஐ.ஆ.ப. குத்து விளக்கேற்றித் தொடங்கி வைத்தார். திருமதி சுசீலா ராஜேந்திரன் முதல் விற்பனையைத் துவக்கி வைத்தார்.

கீழ்த்தளத்தில் காஞ்சிபுரம் ரகங்கள்; முதல் தளத்தில் கும்பகோணம், தஞ்சைப் பட்டு ரகங்கள்; இரண்டாவது தளத்தில் ஆரணி, சேலம் ரகங்கள்; மூன்றாவது தளத்தில் கர்நாடகம், ஆந்திரம், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம், ஒரிசா, ஜம்மு-காஷ்மீர், 'பிரிண்டட்' பட்டு வகைகள்; ஐந்தாவது தளத்தில் குர்தா, சல்வார் கம்மீஸ் முதலான ரகங்கள், ஆயத்த ஆடைகள் ஆகியவை உள்ளன.

புடவைகளின் விலைகள் எவ்வளவு இருக்கும்?

காஞ்சிபுரம் ரகங்கள் 1,200 ரூபாய் முதல் 12,000 ரூபாய் வரை, கும்பகோணம் ரகங்களின் விலை ரூபாய் 1,000 முதல் 2,500 ரூபாய் வரை, ஆரணி வகைகள் ரூபாய் 500 முதல் 1,000 ரூபாய் வரை, சேலம் ரகங்கள் 600 ரூபாய் முதல் 1,300 ரூபாய் வரை.

ஜம்மு-காஷ்மீர், மேற்கு வங்க 'பிரிண்டட்' சேலைகள் 360 ரூபாய் முதல் 500 ரூபாய் வரையில் உள்ளன. ஐந்து கோடி ரூபாய் அளவிற்கு வண்ணச் சேலைகள் - இந்த ஒரே மாளிகையில் வைக்கப்பட்டுள்ளன. இவை தவிர பட்டு வேட்டி, மேல் துண்டு போன்ற வகைகளும் நான்காவது தளத்தில் உள்ளன.

'நெசவாளர்களுக்குப் பட்டு நெசவின் மூலம் கூடுதலான ஊதியம் கிடைக்கிறது என்பதால், பட்டு ரக உற்பத்தி மற்றும் விற்பனைக்கும் அதிக ஊக்கமும், முக்கியத்துவமும் அளிக்க கோ-ஆப்டெக்ஸ் முடிவு செய்துள்ளது. இந்த முடிவை யடுத்து, சென்னை உள்பட எட்டு நகரங்களில் பட்டு ரகங்களுக்காகவே தனியாக விற்பனை நிலையங்கள் திட்டமிடப்பட்டுள்ளது. கோவை, ஈரோடு, சேலம், திருச்சி, ஐதராபாத், மதுரை, பெங்களூர் ஆகிய இடங்களில் இத்தகைய நிலையங்கள் உடனடியாக நிறுவப்படவுள்ளன,' என்று தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்பு அலுவலர் திரு. ஏ. பி. படிகார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.







காதி கிராப்டில்

# முதன் முறையாக ஆடை அலங்கார அணிவகுப்பு

நவராத்திரி விழா-பட்டுக் கண் காட்சி, மாறுவேடப் போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசளிப்பு, ஆடை அலங்கார அணி வகுப்பு ஆகிய நிகழ்ச்சிகள், சென்னைக் குறளகத்தில் 18-10-88 அன்று நடைபெற்றது.

கைத்தறி, துணி, கைவினைப் பொருட்கள் மற்றும் கதர்த்துறை




ஆணையர் மற்றும் செயலர் திரு. மு. பரமசிவம் இ.ஆ.ப. விழாவுக்கு தலைமை வகித்துப் பேசுகையில், 'கதர் வாங்குவதன் மூலம் பல லட்சக்கணக்கான குடும்பங்களை வாழ வைக்கிறோம்' என்று குறிப் பிட்டார்.

கதர் கிராமத் தொழில் வாரி யத்தின் தலைமைச் செயல் அலு வலர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. அனைவரையும் வரவேற் றார்.

மேதகு ஆளுநரின் துணைவியார் திருமதி அக்கம்மா அலெக்சாண்டர் அவர்கள் பட்டுக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தும், மாறுவேடப் போட்டிகளில் வெற்றிப் பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கி யும் பேசினார்.

காதி கிராப்ட் தயாரிக்கும் பட்டு ரகங்கள் மிகவும் நேர்த்தியாகவும், ஜரிகைகள் தரமானவையாகவும் உள் ளன. பிற பட்டு இரகங்களை விட, இப்பட்டு இரகங்கள் உறுதியான வையாகவும்அதேசமயம்விலைகுறை வானதாகவும் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் நாடு மட்டுமின்றி வெளிநாடுகளி லும் பெண்களிடம் கதர்ப்பட்டுப் புடவைகள் மிகவும் பிரபலமாகி உள்ளன.

பட்டு ரகங்கள் 2000 கைத்தறி களில்தயாரிக்கப்பட்டுஅவற்றின்உற் பத்தி 1987-88-இல் ரூ. 5.52 கோடியை எட்டியுள்ளது. இவ் வாண்டில் ரூ. 6.50 கோடி வரை உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.



பட்டு ரகக் கண்காட்சி, ஒவ்வொரு ஆண்டும் சென்னைக் குறளகம் காதி கிராப்ட்டில் நடைபெற்று வருகிறது. சென்ற ஆண்டில் மட்டும் ரூ. 22 இலட்சம் மதிப்புள்ள பட்டு ரகங்கள் விற்பனையாகியுள்ளன. இவ்வாண்டில் நவீனமயமாக்கப்பட்ட விற்பனைப் பிரிவு மூலம் தற்கால நாகரீகத்திற்கேற்ற வகையில் தயாரிக்கப்பட்ட எண்ணற்ற சேலைகளை விற்பனை செய்ய விரிவான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டில் இப்பட்டுக் கண்காட்சி மகளிரைக் கவருவது மட்டுமல்லாது, ரூ. 40 இலட்சம் வரை விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாண்டு தீபாவளிக்குக் குறளகம் காதி கிராப்ட்டுக்கு மட்டும் ரூ. 2.20 கோடி விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 80 இலட்சம் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மத்திய, மாநில அரசு வழங்கும் தள்ளுபடியைப் பயன்படுத்திக் கொண்டு, தீபாவளி விற்பனைக் காலத்தில் ரூ. 18.50 கோடி மதிப்புள்ள கதர்த்துணி வகைகள், பட்டு பாலியஸ்டர் போன்றவைகளை விற்பனை செய்ய வாரியம் திட்டமிட்டுள்ளது. மேலும் பாலியஸ்டர் சேலைகள், சட்டைகள் சூட்டிங்குகள், நேர்த்தியான பாலியஸ்டர் வேட்டிகள் ஆகியவையும் விற்பனைக்கு வந்துள்ளன.





கதர் ரகங்கள் நவீனமயமாக்கப்பட்ட தொழில்நுட்ப உத்திகளைக் கையாண்டு, நல்ல தரமுள்ள வகையில் தயாரிக்கப்படுவதால், கதர்ப் பட்டுத் துணிகள் மிகவும் நேர்த்தியாகவும், நிறங்கள் கண்ணைக் கவரும் வகையிலும் உள்ளன. குறளகம் காதி கிராப்ட்டில், முதல் முறையாக ஆடை அலங்கார அணிவகுப்பு நடந்தது. வண்ணவண்ணப் பட்டுப் புடவைகளை அணிந்து வனிதையர் அணிவகுத்தது அனைவரையும் கவர்ந்தது.

விழா முடிவில், பொது மேலாளர் திரு கே. ரங்கராஜூ நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்.

## 35-வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா 14-11-88-முதல் 20-11-88 வரை

14—11—'88—நேரு மற்றும் கூட்டுறவு ஜனநாயக நாள்

15—11—'88—விவசாயம் மற்றும் கிராம வளர்ச்சி நாள்


16—11—'88—மாற்றி அமைக்கப்பட்ட 20-அம்ச திட்ட நாள்

17—11—'88—தொழில் மற்றும் கைத்தறிக் கூட்டுறவு நாள்

18—11—'88—அமைதிமற்றும் தேசீய ஒருமைப்பாடு நாள்

19—11—'88—இளைஞர், மகளிர் நலிவுற்றோர் மற்றும் வீடற்றோர் காப்பக நாள்

20—11—'88—கூட்டுறவு விற்பனை மற்றும் பொது விநியோக நாள்




# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி
உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான
சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை
வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*



# அண்ணல் காந்தியடிகள் விழா

தேசத் தந்தை காந்தியின் பிறந்த நாளையொட்டி 2-10-88 அன்று சென்னைக் கடற்கரையில் அமைந்துள்ள அண்ணல் காந்தியடிகள் சிலைக்கு, ஆளுநரின் ஆலோசகர்கள் திரு. ஐ.வி. ராமகிருஷ்ணா, திரு. ஆ. பத்மநாபன், தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம், ஸ்ரீலங்காவின் அமைச்சர் மாண்புமிகு திரு. ராஜதுரை ஆகியோர் மாலை அணிவித்தார்கள். தக்கர் பாபா வித்யாலயாவைச் சார்ந்த மாணவர்கள் காந்தி சிலை முன்பு அமர்ந்து ராட்டையில் நூல் நூற்றனர்.

மாலையில் கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் மகளிர் காந்தி சிலையிலிருந்து ஊர்வலமாகச் சென்று கிண்டி காந்தி மண்டபத்தை அடைந்தனர். கவிஞர் திரு. சுப்பு ஆறுமுகத்தின் வில்லிசை நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது.

செய்தி, சுற்றுலாத் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு. செ. ராம்தாஸ் வரவேற்புரையாற்றினார்;

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆ. பத்மநாபன் தலைமை வகித்துப் பேசுகையில், 'கிராமங்கள் முன்னேறாமல் நாடு முன்னேற முடியாது என்ற காந்தியடிகளின் கருத்தை நடைமுறைப்படுத்த ஏழை எளிய மக்களுக்காக அரசு பணியாற்றி வருகிறது.'' என்றார்.

திருமதி வைஜயந்திமாலா பாலி எம்.பி. பேசுகையில், 'தாம் பிறந்த மண்ணை எப்படி நேசிக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகக் காந்தியடிகள் திகழ்ந்தார்.'' என்றார்.

திரு. ஓ. வி. அளகேசன் பேசுகையில், 'காந்தியடிகள் எந்த வன்முறையை விடுதலைக்காகப் பயன்படுத்தக் கூடாது என்று கூறி வந்தாரோ, அது சுதந்திரம் பெற்ற பிறகு இன்று பஞ்சாபில் தலைவிரித்தாடுவது மிகவும் வருந்தத்தக்கது' என்றார்.

கண்காட்சியைத் திறந்து வைத்து விழாப் பேருரையாற்றி திரு. சி. சுப்பிரமணியம் பேசுகையில், 'காந்தியடிகள் மக்களுக்கு வழிகாட்டக் கூடியவராகத் திகழ்ந்தார். யுத்தத்தினால் மனித சமுதாயமே அழிந்து விடும் நிலையுள்ளது.காந்தி காட்டிய அகிம்சை வழிகளில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். வறுமையை ஒழிக்க கிராம அடிப்படையில் திட்டம் வகுக்க வேண்டும்.' என்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. நா. கிருஷ்ண பாரதி நன்றி நவின்றார்.

## தீண்டாமை ஒழிப்பு நாள்

அண்ணல் காந்தியடிகள் விழாவின் இரண்டாவது நாள் (3-10-88) தீண்டாமை ஒழிப்பு நாளாகக் கொண்டாடப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு. சி. இராமச்சந்திரன் அனைவரையும் வரவேற்றார். டாக்டர் சி. பால சுப்பிரமணியம் பேசுகையில்,'யாதும் ஊரே, யாவரும் கேளிர்'-என்று சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது. கோயிலில் தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிக்கவில்லை என்றால், நான் அந்தக் கோயிலுக்கு வர மாட்டேன் என்று காந்தியடிகள் கூறினார்'' என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. என். வி. என். சோமு பேசுகையில், 'விடுதலைப் போராட்டத்தில், தமிழை ஒரு மாதக் காலம் படித்தேன். அது ஒரு இனிமையான மொழி. நான் தமிழ் இலக்கியத்தைப் படிக்கப் படிக்கத், தமிழர்களைப் புரிந்து கொண்டேன் என்று காந்தியடிகளே கூறினார்'' என்றார்.

டாக்டர் எஸ். வி. சிட்டிபாபு பேசுகையில், 'காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்புக்காகக் காலமெல்லாம் உழைத்து வந்தார்' என்றார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. எஸ். சிவசுப்பிரமணியம் பேசுகையில், 'காந்தியடிகள் நம் நாட்டின் சரித்திரத்தையே மாற்றியமைத்தார். தீண்டாமையையே ஒழிக்க வேண்டும் என்றும், அரசியலிலே ஒரு சுதந்திரம் வேண்டும் என்றும் விரும்பினார்'' என்றார்.

விழாவில், கலப்புத் திருமணம் செய்த தம்பதிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் ஏழை, எளியோர்க்கு அரசின் சார்பாக, தையல் மிஷின்களும், தோல் தையல் இயந்திரங்களும் பரிசாக வழங்கப்பட்டன.

இறுதியில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு பி. பாஸ்கரதாஸ் நன்றி கூறினார்.

## இளைஞர் நாள்

இளைஞர் தினமாக 4-10-88 அன்று கொண்டாடப்பட்டது. சென்னையைச் சார்ந்த 13 கல்லூரி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

கல்லூரிக் கல்வி இயக்குநர் டாக்டர் போ. ச. சுப்ரமண்யம் அனைவரையும் வரவேற்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்து உரையாற்றிய இளைஞர் விளையாட்டுப் பயிற்சித்துறை இயக்குநர் திரு. ஏ. என். தியானேஸ்வரன் பேசுகையில், 'இன்றைய இளைஞர்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையாகி வருகிறார்கள். அதைப்

போக்க விளையாட்டுத் துறை பாடு படும் என்று தெரிவித்துக் கொள் கின்றேன்' என்றார்.

சிறப்புரையாற்றிய பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. கி.கோபாலன் 'காந்தி அவர்கள் பதவிக்கு ஆசைப் படவில்லை' என்றார். தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் அவ்வை நட ராசன் பேசுகையில், 'இளம் வயதி லேயே இலட்சியங்களை—நல்ல எண்ணங்களை இளைஞர்களாகிய நீங்கள் வளர்த்துக் கொள்ளவேண் டும்'' என்றார். முதன்மைக் கல்வி அலுவலர் திரு. ராசாராம் நன்றி கூறினார்.

**மகளிர் நாள்**

5.10.88 அன்று காலை கொண் டாடப்பட்ட மகளிர்நாள் நிகழ்ச்சி யில் தென்னாப்பிரிக்க நாட்டு விடு தலைப் போராட்ட வீராங்கனை திருமதி மனோன்மணி அம்மையார் அவர்களுக்கு ஆளுநரின் துணைவி யார் திருமதி அக்கம்மா அலெக்சாண்டர் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

சமூகநலத்துறை ஆணையரும் செயலருமான திரு எம். வைத்திய லிங்கம் இ.ஆ.ப. வரவேற்றார். திருமதி அக்கம்மா அலெக்சாண்டர் தலைமை வகித்தார்.

விழாவில் பங்கேற்ற திருமதி மனோன்மணி அம்மையாரின் குடும் பம் அண்ணல் காந்தியடிகளோடு கொண்டிருந்த நெருக்கமான தொடர்புகளையும், பிற விவரங் களையும், செய்தி மக்கள் தொடர் புத்துறை இயக்குநர் திரு சி.என். கிருஷ்ணபாரதி, இ. ஆ. ப. எடுத் துரைத்தார்.

விழாவில் நாடாளுமன்ற உறுப் பினர் திருமதி மரகதம் சந்திரசேகர், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் லலிதாகாமேஸ்வரன், உழைக்கும் மகளிர் சங்கத்தைச் சேர்ந்த திருமதி ஜெயாஅருணா சலம், மகளிர் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு வி. சந்திரலேகா இ.ஆ.ப. ஆகியோர் உரைநிகழ்த்தினார்கள்.

சமூகநலத்துறை இயக்குநர் திருமதி ஷீலா ராணி சுங்கத், இ.ஆ.ப., நன்றி கூறினார்.

## சிறப்புக் கூட்டம்

5-10-88 அன்று மாலை சிறப்புக் கூட்டம், இசைக் கல்லூரி மாண வர்களின் இன்னிசையோடு தொடங்கியது.

செய்தி சுற்றுலாத் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு செ. ராம்தாஸ் இ.ஆ.ப. வர வேற்புரையாற்றினார்.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் தலைமை யில் நடைபெற்ற இவ்விழாவில் பேசுகையில் - தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ.சிவஞானம் குறிப்பிட்டார்: 'மகாத்மாவின் இந்தப் பிறந்த நாளில் நான் வேண்டுவதெல்லாம்- தமிழ்நாட்டில் பரிபூரண மது விலக்குச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். வகுப்புக் கலவரங்களை அடக்க காந்திப் படையாம் சாந்திப் படையொன்று அமைக்கப்படவேண் டும்.''


டாக்டர் நா. மகாலிங்கம் பேசு கையில், ''காந்தியடிகளைப் பற்றி ஆராய வேண்டுமானால் அதற் கேற்ற வசதியுடைய நிலையம் மதுரையில்தான் இருக்கிறது; இந்த காந்தி மண்டபத்தையும் அரசு அப்படி ஆக்க வேண்டும்'' என்று தெரிவித்தார்.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் தலைமை யுரையில் குறிப்பிட்டதாவது:

'காந்தியடிகள் உண்மையின் அவ தாரமாக, உழைப்பை மதித்துப் போற்றுபவராக வாழ்ந்தார். உண்மையைப் பிறருக்குப் போதிப் பவராக மட்டுமல்லாமல், தம் வாழ் வில் அதை நிலை நிறுத்தத் தியாகங்கள் புரிபவராகவும் இருந் தார்.''

திரு. கிரிதாரி பிரசாத் பேசுகை யில், ''இது போல ஒரு மனிதன் வாழ்ந்தானா என்று வருங்காலச் சந்ததியினர் ஐயுறும் வண்ணம் வாழ்ந்து மறைந் தவர் காந்தியடிகள்'' என்றார்.

விழா முடிவில் - செய்தி சுற்று லாத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி நன்றி கூறினார்.





நாட்டின் சேவைக்காக நான் உயிரிழக்க நேர்ந்தால் அதற்காகப் பெருமைப்படுகிறேன். என்னுடைய ஒவ்வொரு சொட்டு இரத்தமும் நாட்டின் வளர்ச்சிக்கே பயன்படும்; நாட்டை வலிமையும் வேகமும் உள்ளதாக்கும்''

—திருமதி இந்திரா காந்தி

(பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தமது மறைவிற்கு முன் தினம் (30.10.1984) புவனேஸ்வரில் (ஒரிசா மாநிலம்) ஆற்றிய கடைசி உரையின் ஒரு பகுதி).

## கதர் மற்றும் கிராமத் தொழில் நாள்

கதர் மற்றும் கிராமத் தொழில் நாள் 6-10-88 அன்று நடந்தது.

தொடக்கத்தில், காவல்துறையினரின் கரகம், காவடி ஆட்டங்கள் நிகழ்ந்தன.

கைத்தறி மற்றும் கதர்த்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு. மு. பரமசிவம் இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

காந்தியக் கிராமியப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு தேவேந்திரகுமார் தலைமை வகித்தார்.

திரு. வ. உ. சி. சுப்பிரமணியம், திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி சரோஜினி வரதப்பன், திரு சி. டி. வி. இராகவலு ஆகியோர் அண்ணல் காந்தியடிகளின் தொண்டுகளை விளக்கிப் பேசினர்.

### தேசிய ஒருமைப்பாடு நாள்

7.10.88 அன்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு நாள் நிகழ்ச்சியில் சென்னை மாநகரத்தைச் சேர்ந்த பல்வேறு மேநிலைப்பள்ளி மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன

நிகழ்ச்சிக்கு செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., தலைமை வகித்தார். திரு சி.ஆர். பட்டாபிராமன், தவத்திரு பேராயர் கசிமிர்ஞானாதிக்கம், திருக்குறளார் திரு. வீ. முனிசாமி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். இணை இயக்குநர் திரு வி. டி. வீரப்பன் நன்றி கூறினார்.

## மதுவிலக்கு நாள்

8-10-88 அன்று மத்திய அரசின் இசை மற்றும் நாடகப் பிரிவினரின் கலைநிகழ்ச்சியோடு, அண்ணல் காந்தியடிகள் விழா 'மதுவிலக்கு நாளாகத் தொடங்கியது.

திரு. சந்திர கிஷோர் வரவேற்புரையுடன் தொடங்கிய இவ்விழாவிற்கு-மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறைச் சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு டி. ஸ்ரீதரன் தலைமை தாங்கினார்.

திரு. சி. ஆர். நரசிம்மன், திரு டி. செங்கல்வராயன், திருமதி டாக்டர் எஸ். விஜயலட்சுமி, திரு ஷோபாகாந்தி தாஸ் ஆகியோர்—காந்தியடிகளாரின் அருமை பெருமைகளைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

காந்தியாரின் பிறந்தநாள் விழாவையொட்டி நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கி-தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம். ராஜேந்திரன் இ.ஆ.ப. சிறப்புரையாற்றினார். கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் அரசு காட்டிவரும் தீவிரத்தை விளக்கிய அவர், மதுவை ஒழிப்பதில் அண்ணல் காந்தியடிகள் கொண்டிருந்த அக்கறையை விவரித்தார்.

விழா முடிவில், காவல்துறையின் மதுவிலக்கு அமைப்புப் பிரிவு கண்காணிப்பாளர் திரு கே. காசிம் நன்றி கூறினார்.

### அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை**

அன்னை இந்திராகாந்தி மறைந்த நாளான அக்டோபர் 31 ஆம் நாள் தேசிய மறு சமர்ப்பண நாளாகக் கொண்டாடப்படுவதை நினைவூட்டும் வகையில் அன்னை இந்திராகாந்தியின் படம் முதல் பக்க அட்டையை அலங்கரிக்கிறது.

**பின் பக்க அட்டை**

35-வது அனைத்திந்திய கூட்டுறவு வாரம் நவம்பர் 14 ஆம் நாள் தொடங்குவதை நினைவூட்டும் வகையில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் பால் வழங்கும் நிகழ்ச்சி பின்பக்க அட்டையில் இடம் பெறுகிறது.

## நிறைவு விழா

அண்ணல் காந்தியடிகள் விழாவின் நிறைவு விழா, 9-10-88 அன்று நடந்தது.

செய்தி-சுற்றுலாத்துறைச் சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு செ. ராம்தாஸ் இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''அண்ணல் காந்தியடிகள் தம் வாழ்நாளில் போற்றிய தீண்டாமை, மகளிர் மேம்பாடு, ஒருமைப்பாடு முதலான சிறப்பம்சங்கள், ஒரு வார விழாவில் இடம் பெற்றன'' என்று குறிப்பிட்டார்.

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி. வி. இராமகிருஷ்ணா அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், 'அண்ணல் காந்தியடிகளின் கருத்துக்களை - கொள்கைகளை-தத்துவங்களை நாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும்' என்றார்.

திரு ஜி. கருப்பையா மூப்பனார் எம். பி. அவர்கள் பேசுகையில், 'அண்ணல் காந்தியடிகள் வாழ்ந்த காலத்தில் அவர் வகுத்துக் கொடுத்த இலட்சியங்களை-கொள்கைகளை நிறைவேற்ற நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்' என்றார்.

விழாவில், திரு. திருமலை, திரு த. ஜெயகாந்தன் ஆகியோர் பேசினர்.

அண்மையில், வேதாரணிய உப்புச் சத்தியாக்கிரகப் பாத யாத்திரையில் பங்கு பெற்றவர்களுக்கும், விடுதலை நாள் பேரணியில் பங்கு கொண்ட பள்ளி மாணவ மாணவியருக்கும், மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா அவர்கள் சான்றிதழ்கள் வழங்கினார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ண பாரதி இ.ஆ.ப. நன்றி கூறினார்.

விழா முடிவில், டாக்டர் சீர்காழி சிவசிதம்பரத்தின் இன்னிசை நிகழ்ச்சி நடந்தது.

— நமது செய்தியாளர்

# பார்த்தோம் படித்தோம்



மகாத்மாவின் நகைச்சுவை (1-10-88 இதழ்) சிரிக்க மட்டுமல்ல, சிந்திக்கவும் வைத்துவிட்டது.

—பி. கோவிந்தசாமி,
பேதாதம்பட்டிபுதூர்.

இதே கட்டுரையைப் பாராட்டி, மாரம்பட்டி, எல்.-முத்து, திருவண்ணாமலை-1, வெ. சங்கர நாராயணன் ஆகியோரும் எழுதியுள்ளனர்.

மகாத்மாவின் அட்டைப்படம் கண்களைக் கவர்ந்தது. அண்ணல் அவர்களின் வாழ்வில் நடந்த அரிய சாதனைகளைத் தெரிந்து கொண்டேன்.

எஸ்.பி. சந்தான ராஜ
கோபால்,
களப்பால்.

இதே கருத்தை சூலூர், எஸ்.ஏ. மயில்சாமி, தென் எலப்பாக்கம் ஸ்ரீதர், ஸ்ரீராம், அந்தமான், ஏ. பீர்முகமது ஆகியோரும் பாராட்டி எழுதியுள்ளனர்.

காந்தியடிகளின் கட்டுரைகள் அனைத்தும் சிந்தனைக்கு விருந்து.

வி. கே. வீரசேகரன்,
விக்கிரபாண்டியம்.

அண்மைக் காலமாக அன்றலர்ந்த மலராக வெளியாகும் 'தமிழரசு' இதழ்கள் - அதில் மலரும் படங்கள் கட்டுரைகள்,செய்திகள், கவிதைகள், பொன்மொழிகள், சமுதாய நலத் திட்டங்கள், கலை, கல்வி, தொழில் ஆகிய கோணத்தில் வெளியாகும் அனைத்துப் படைப்புகளுமே 'பார்த்தோம் படித்தோம்' என்றில்லாமல் 'பத்திரமாகப் பாதுகாத்தோம்' என்று எண்ணக்கூடிய அளவுக்கு இருக்கின்றன.

அரிமா, பூபாளம்
ப. முருகேசபாண்டியன்
கரப்பாடி.

மாணவர் பக்கம் பகுதியில் வெளியாகும் கவிதைகள், அறிவுச் செய்திகள், கட்டுரைகள் இன்றைய இளைய தலைமுறையினருக்கு ஒரு 'வரப்பிரசாதம்'.

—பாலூர், ந. பாலாஜி,
கீழப்பாலூர்.

காரைக்குடி ஓ.எம். சிராஜ் எழுதியுள்ள 'தமிழ் இலக்கியங்கள் கூறும் சட்ட நெறிகள்' என்ற கட்டுரை சுவையாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. இதுமாதிரி அரிய சிறப்பான கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிடவும்.

தர்மலிங்கம்,
முறையூர்.

இதே கட்டுரையைப் பாராட்டி வேலூர், எஸ்.ராமமூர்த்தி, காரைக்குடி ஆர். முத்துவேல், வீரகேரளம் புதூர் பி.கிருஷ்ணன், சென்னை-23 இராவணதாசன் பாண்டிச்சேரிபேராசிரியர் கு. சிவமணி, புதுவயல் எம். முகம்மது அனிபா, மு. ரமீசா பேகம், சீதா, காரைக்குடி ஆர். கீதா, கோட்டையூர் மேனகா ஆகியோரும் எழுதியுள்ளனர்.

காந்தியடிகளைப் பற்றி வெளிவந்த செய்திகள் போற்றுதற்குரியது.

நா. அருணாசலன்
கண்டவராயன்பட்டி.

வண்ணக்கலவையில் அண்ணல் மகாத்மா அவர்களின் திருவுருவம் மிக நன்றாக இருந்தது.

வ. சண்முகசுந்தரம்,
புதுக்கோட்டை.

# வீரபாண்டிய கட்டபொம்மன்

ஞா. மாணிக்கவாசகன்


ஆயிரத்து எழுநூற்று
தொண்ணூற் றொன்பது
அக்டோபர் பதினாறு
கயத்தாற்றில் கட்ட
பொம்மன் தூக்கில்
இடப்பட்ட துயர நாள்!

உலக வரலாற்றில்
இஃதோர் துக்கநாள்
துயரநாள் என்றாலும்
இந்திய சுதந்திர
விடுதலைப்போரெனும்
வேள்வித் தீயில்
உயிர்ப்பை மூட்டிய
நெருப்பு நாள் இது!

கயத்தாற்றில் அன்று
கட்ட பொம்மன்
காற்றிலே விதைத்த
கனவுப் பயிரின்
நாற்று விளைச்சலே
நாமின்று சுவாசிக்கும்
மூச்சுக் காற்று
சுதந்திர முழக்கம்!

வாழும் போது
வான்மழை போல
வாழ்ந்த மறவன் !
வீழ்ந்த போதும்
எரி நெருப்புச்
சுடர்போல் வீழ்ந்தவன்!

இவன்புகழ் பாடி
இந்திய நாட்டின்
பழம்புகழ் மீட்க
மீண்டும் இங்கொரு
புதிய சபதம்
ஏற்போம் வருக!



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு
மற்றும் தங்க சரிகைகளைக்
கொண்டு நெசவு செய்யப்பட்ட
புதுமையான
பட்டுச்சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய
கைத்தறி கூட்டுறவு விற்பனை
நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ்.
அதற்குச் சொந்தமான
560 விற்பனைக்கூடங்கள்
மூலமாக கோடிக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

தமிழரசு

Licence No. TN/MS(C)/PP-23

